# தேசிய கொள்கைச் சட்டகம்

## நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு

### சாராம்சம்

# உள்ளடக்கம்

பக்க இல


| | | |
|---|---|---|
| 1. | பத்து அம்சக் கொள்கைகள் | 1 |
| 2. | ஊழலற்ற செயற்றிறன் மிக்க நாடு | 2 |
| 3. | அனைவருக்கும் பாதுகாப்பான நாடு | 6 |
| 4. | பயனுள்ள பிரசையும் மகிழ்ச்சியான குடும்பமும் | 11 |
| 5. | மக்களை மையப்படுத்திய 0பொருளாதாரம் | 21 |
| 6. | தொழில்நுட்பத்தை மையப்படுத்திய சமூகம் | 43 |
| 7. | பௌதீக அமைப்பின் புதிய அணுகுமுறை | 45 |
| 8. | நிலைபேறான சுற்றாடல் கொள்கை | 58 |
| 9. | சட்டத்தை மதிக்கும் குணநலம் கொண்ட ஒழுக்க நெறியான சமூகம் | 63 |
| 10. | கிராமத்துடனான கலந்துரையாடல் | 76 |

# அத்தியாயம் - 01
# பத்து அம்சக் கொள்கைகள்

## அறிமுகம்

அரசாங்கத்தின் இந்த தேசிய கொள்கை வேலைச்சட்டகமானது, பயனுள்ள பிரஜை, மகிழ்ச்சியாக வாழும் குடும்பம், ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட சமூகம் மற்றும் செழிப்பான தேசம் என்ற நான்கு வகையான இலக்குகளை அடைந்துகொள்ள 10 பிரதான கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது. சமூக, பொருளாதார, சுற்றாடல் மற்றும் அரசியல் எண்ணக்கருக்களுக்கு உரிய கவனம் செலுத்தும் வகையிலான பத்து பிரதான கொள்கைகள் பின்வருமாறு;

## பிரதான கொள்கைகள்

- தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை
- சிநேகபூர்வ மற்றும் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கை
- தூய்மையான அரச நிர்வாகம்
- மக்களுக்கு பொறுப்புக் கூறும் யாப்பு சீர்திருத்தம்
- பயனுள்ள பிரஜை - பலனுள்ள மனித வளம்
- மக்களை மையமாகக்கொண்ட பொருளாதாரம்
- தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகம்
- பௌதீக வள அபிவிருத்தி
- பேண்தகு சூழல் முகாமைத்துவம்

தேசியக் கொள்கை வேலைச்சட்டகமானது தேசியப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு முதன்மையான முன்னுரிமையினை வழங்குகின்றது. எமது மக்கள் அனுபவிக்கின்ற சனநாயக ஏற்பாடுகளை எவ்வகையிலும் விட்டுக்கொடுக்காது தேசிய பாதுகாப்பினை பாதுகாப்பதற்கான புதிய செயன்முறைகள் பின்பற்றப்பட வேண்டுமென தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

# அத்தியாயம் - 02
# ஊழலற்ற செயற்றிறன் மிக்க நாடு

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| ஆட்சி | வினைத்திறன் மிக்க அரசாங்க நுட்பமுறை | அனைத்து விதமான திறனின்மையினை நீக்கி மக்கள் பொறுப்பு அரசாங்கத்தினை உருவாக்குதல் | • விடய நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தினைக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சரவைக்கு நியமித்தல் |
| | | | • தேவையான நிர்வாக அனுபவம் அல்லது உரிய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட உயர் தொழில் அனுபவங்களைக் கொண்ட அரச ஊழியர்களிலிருந்து திறமையான அர்ப்பணிப்பு மிக்க செயலாளர்களை அமைச்சுக்களுக்கு நியமித்தல் அனைத்து விதமான நிறைவேற்று மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கான அடுத்துவரும் அலுவலர் திட்டத்தினை அறிமுகப்படுத்தல் மற்றும் அவர்களது தொழில் ஆற்றலினை வளப்படுத்துவதற்காக பயிற்சி நெறிகளையும் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) அறிவு ஆற்றலினையும் வழங்குதல்<br>• அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்டசபைகளின் பணிப்பாளர் சபைக்கு ஆற்றல் மற்றும் தலைமைத்துவ தகைமையுடையவர்களை தெரிவு செய்வதற்கான புதிய முறைமையினை அறிமுகப்படுத்தல் |
| | | வினைத்திறன் மிக்க அரச சேவையை வழங்கல் | • அரச சேவைகளை துரிதப்படுத்துவதற்கு அரச துறையில் தற்பொழுது காணப்படும் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளை இற்றைப்படுத்தல் |
| | | பொருளாதார கொள்கை உருவாக்கம் மற்றும் செயற்படுத்துகையில் வெளிப்படைத் தன்மையினை உறுதிப்படுத்தல் | • சனாதிபதியின் கீழ் தொழிற்படுகின்ற "தேசிய கொள்கை, திட்டமிடல் மற்றும் செயற்படுத்துகை ஆணைக்குழு" இனைத் தாபித்தல்<br>• கொள்கை உருவாக்கத்தில் பொது மக்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான உபாய முறையொன்றினைத் தாபித்தல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை 2030 அளவில் அடைந்து கொள்வதனை உறுதிப்படுத்தல் | • 2030 அளவில் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு அமைச்சரவையினை மீள்கட்டமைத்தல்<br>• பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முறைமையான திட்டமொன்றினைத் தயாரித்தல் |
| | | அரசாங்க செலவினத்தின் வினைத்திறன் மற்றும் பயன்வலுத்தன்மையினை உறுதிப்படுத்தல் | • அரசாங்க செலவினம் மற்றும் முதலீடு தொடர்பாக அமைச்சரவை பத்திரங்களை அவதானிப்பதற்கு அமைச்சரவை செயலாளரின் தலைமையின் கீழ் சிரேட்ட பதவியணி குழுவொன்றினைத் தாபித்தல்<br>• அரசாங்க துறைக்காக அலுவலகங்கள் மற்றும் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் வாடகைக்குப் பெறுதல் என்பன 3 வருடங்களுக்கு இடைநிறுத்தப்படும் |
| | **ஊழலினை தோற்கடித்தல்** | அரசியல்வாதிகள் அல்லது சிரேட்ட அரச அலுவலர்கள் எவரும் எவ்வகையான ஊழலிலும் ஈடுபடாதிருப்பதனை உறுதி செய்தல் | • மத்திய வங்கி முறி மோசடி மற்றும் 20 பிரதான நிதி தொடர்பான குற்றச் செயல்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுத்தல்<br>• ஊழல் மிக்க அரசியல் வாதிகள் மற்றும் அரச அலுவலர்களுக்கெதிராக செயற்படுவதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலன்விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினை வலுப்படுத்தல்<br>• நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் நிதி தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்கான விசேட நீதிமன்றம் என்பவற்றினை ஒழுங்குபடுத்தி நிறுவனமயப்படுத்தல் |
| | | ஊழலினை இல்லாதொழிப்பதற்கு சட்ட மறுசீரமைப்பு மற்றும் புதிய தொழில்நுட்பம் என்பவற்றினை உறுதிப்படுத்தல் | • இலஞ்சம் மற்றும் ஊழலினைக் குறைப்பதற்கு கொள்வனவு, வரித் தீர்மானம் மற்றும் ஒப்பந்தம் வழங்கல் என்பவற்றினை மேற்கொள்வதற்கு ஒன்லைன் முறைமையொன்றினை அறிமுகம் செய்தல்<br>• தேசிய பெறுகைக்கான ஒன்லைன் முறைமையொன்றினை அறிமுகம் செய்தல்<br>• அரசாங்க சொத்துக்களை உகந்த முறையில் பயன்படுத்தல் மற்றும் அரச தேவைகளுக்கு பொறுப்பளித்தலுக்கான புதிய அரசாங்க நுட்ப முறையொன்றினை உருவாக்குதல்<br>• பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இலத்திரனியல் தொழில்நுட்ப முறைமையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கான சட்ட |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | மறுசீரமைப்பு<br>• இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் சட்ட வேலைச்சட்டகத்தினை வலுப்படுத்தல் |
| | **அரச தொழில் முயற்சிகளின் முகாமை** | அரச உடைமை தொழில் முயற்சிகள் அனைத்தினதும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் வகைகூறும் பொறுப்பினை உறுதிப்படுத்தல் | • அரச உடைமை தொழில்முயற்சிகள் அனைத்தினதும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினை உபாயத் திட்டத்திற்காக ஒரு மேசைக்கு அழைத்தல்<br>• அரச தொழில்முயற்சிகள் அனைத்தினதும் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை தமது நிறுவனங்களின் அனைத்து விதமானபிழையான நடத்தைகள் தொடர்பான பொறுப்புக் கூறலினை உறுதிப்படுத்தல்<br>• பணிப்பாளர் சபை மற்றும் சிரேட்ட முகாமைத்துவ குழுவினை தகுதி அடிப்படையில் நியமித்தல்<br>• கணக்காய்வு தராதரங்களுக்கமைவாக நிதிக் கூற்றுக்களை உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதனை அரச வங்கி, அரச தொழில் முயற்சிகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் அனைத்தினதும் ஆணையாகக் கொள்ளுதல் |
| | | அரச தொழில் முயற்சிகளை தனியார் மயப்படுத்தலினை நிறுத்துவதற்கான சட்ட மறுசீரமைப்பு | • ஏதேனும் அரச தொழில் முயற்சி தனியார் மயப்படுத்தப்படுவதனை நிறுத்துவதற்கு சட்டங்களைத் திருத்துதல்<br>• அரசாங்க மற்றும் அரச உடைமை நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்குமான சட்டங்களை அறிமுகப்படுத்தல் |
| | | வினைத்திறன் மிக்க, இலாபமீட்டும் அரச தொழில் முயற்சிகளை உறுதிப்படுத்தல் | • அரச தொழில் முயற்சிகளை முகாமை செய்வதற்கு சிரேட்ட உயர் தொழில் புரிநர்களை நியமித்தல்<br>• தேசிய தொழில் முயற்சிகள் அதிகாரசபையினை தாபித்தல்<br>• ஒரே வகையான செயலாற்றுகையுடைய அரச தொழில் முயற்சிகளினை ஒருங்கிணைத்தல்<br>• நாணய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த அரச தொழில் முயற்சிகளுக்கான விசேட திறைசேரி கண்காணிப்பு முறைமையொன்றினைத் தாபித்தல்<br>• பெரியளவிலான அரச தொழில்முயற்சிகளுக்கு உயர் தொழில்புரிநர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் தற்பொழுது காணப்படும் சம்பளங்கள் மற்றும் சட்டங்களைத் திருத்துதல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
| --- | --- | --- | --- |
| | | | • அவற்றினது செயலாற்றுகையினை கண்காணிப்பதற்கு திட்டமொன்றினைத் தாபித்தல் |
| | சனநாயக ஆட்சியினூடாக தேசிய நல்லிணக்கத்தினை அடைந்து கொள்ளுதல் | பொது மக்களின் அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியல் அமைப்பு | • நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறைமை கலப்பு தேர்தல் முறைமை, மாகாண சபைகள் மற்றும் நீதித்துறையின் சுயாதீனத்தினை வலுப்படுத்தல்<br>• புத்தசாசனத்திற்கு முக்கிய இடத்தினை வழங்குவதை உறுதிப்படுத்தல், சமய சுதந்திரத்தினை தாபித்தல் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் |
| | | இனக் குழுக்களுக்கிடையில் நல்லிணக்கம் | • சனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் சமயங்களுக்கிடையிலான ஆலோசனை பேரவையினைத் தாபித்தல்<br>• த.ஈ.வி.பு போராளிகள் மற்றும் பல்வேறு பல்வேறு குற்றங்களைப் புரிந்தவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்களை சமூகத்தில் சுதந்திரமாக வாழக்கூடிய நிலையில் ஒருங்கிணைத்தல்<br>• மிக நீண்டகாலமாக பயங்கரவாதம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட அனைவருக்கும் 3 மாதங்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தல் அல்லது அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்<br>• வரலாறு மற்றும் புவிச்சரிதவியல் காரணிகள், இயற்கை வளங்கள், நகர மயப்படுத்தல் மற்றும் எதிர்காலத்தேவைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு காணிப் பயன்பாட்டுக் கொள்கையினை தயாரிப்பதற்கு தேசிய காணி ஆணைக்குழுவொன்றினைத் தாபித்தல்<br>• சிங்கள மொழிமூல மாணவர்கள் தமிழ்மொழி கற்பதற்கும் தமிழ் மொழிமூல மாணவர்கள் சிங்கள மொழி கற்பதற்கும் கட்டாயப்படுத்துவதன் மூலம் தொடர்பாடல் இடைவெளியினை இல்லாதாக்குதல் |
| | | சிறந்த ஒழுக்கப் பண்பாடுமிக்க அரசியல் சூழல் | • கட்டுக்கடங்காத, ஒழுக்கமற்ற மரியாதை குறைந்த மக்கள் பிரதிநிதிகளை சட்டத்தினைக் கொண்டு கையாளுதல்<br>• தேர்தல் தொடர்பான செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை ஆக்குதல்<br>• தேர்தல் வன்முறைகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினை வலுப்படுத்தல் |

# அத்தியாயம் - 03
# அனைவருக்கும் பாதுகாப்பான நாடு

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | தேசிய பாதுகாப்புக்கு அதிக முன்னுரிமை வழங்குதல் | பாதுகாப்புப் படை மற்றும் பொலிஸ் புலனாய்வு சேவைகளை வலுப்படுத்தல் | • தகைமையுடைய அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்<br>• அனைத்து தொடர்புடைய நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதற்கு தேவையான அதிகாரத்துடன் கூடிய தேசிய புலனாய்வுப் பிரதானி என்ற பதவியினைத் தாபித்தல் |
| | | சர்வதேச புலனாய்வு நிறுவனங்களுடன் தொடர்பு | • நவீன தொழில்நுட்பம் தொடர்பான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளை வழங்குதல்<br>• நவீன தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான பயிற்சியினை புலனாய்வு அதிகாரிகளுக்கு வழங்குதல் |
| | | படையினரின் தார்மீக ஒழுக்க நெறியினை மீளக் கட்டியெழுப்புதல் | • படையினர் தமது கடமையினை அரசியல் தலையீடு எதுவுமின்றி அச்சமின்றி கௌரவத்துடன் முன்னெடுப்பதற்கு முடியுமான சட்டரீதியான பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் |
| | | அனைத்து பிரசைகளுக்குமான விசேடமாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான பாதுகாப்பான நாட்டினை உறுதிப்படுத்தல் | • சர்வதேச அச்சுறுத்தல்கள், போதைப் பொருள் கடத்தல், பணம் தூய்தாக்கல் மற்றும் ஏனைய நடைமுறையிலுள்ள தொற்றுநோய்கள் மற்றும் இணையத் தாக்குதல்கள் என்பவற்றிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல் |
| | | முதலீட்டாளர்களுக்கான சுதந்திரமான சூழலொன்றினை உருவாக்குதல் | • அனைத்து வகையான ஊழல்கள், மோசடி, இலஞ்சம் மற்றும் அச்சுறுத்தல்களைத் தவிர்த்தல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
| --- | --- | --- | --- |
| | | பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதம் என்பவற்றுக்கு ஒத்துழைக்கின்ற அனைத்து கட்டமைப்புகளையும் தகர்த்தல் | • ஏப்ரல் 21 தாக்குதலினை விசாரிப்பதற்கான சுயாதீன ஆணைக்குழு ஒன்றினை நியமித்தல், குற்றவாளிகளை வெளிக்கொனர்தல் மற்றும் சட்டத்திற்கமைவாகத் தண்டணை வழங்குதல் என்பன துரிதப்படுத்தப்படும்.<br>• ஏப்ரல் 21 தாக்குதலினால் காயமுற்றவர்களுக்கான வெளிநாட்டு சிகிச்சை உள்ளடங்களாக மேலதிக சிகிச்சைகளுக்கு அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும்<br>• நிரந்தரமாக அங்கவீனமுற்றவர்களுக்கு நீண்டகால பராமரிப்பு முறைமையொன்று செயற்படுத்தப்படும்<br>• குறித்த தாக்குதலினால் அநாதைகளான சிறுவர்களுக்கு மாதாந்த நிதி உதவி வழங்குதல்<br>• ஏப்ரல் 21 தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்குதல் |
| | போதைப்பொருளற்ற நாடு | நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டுவருவதனை நிறுத்துதல் | • சுங்கம் மற்றும் ஏனைய எல்லைக் காப்பு அதிகாரிகளுக்கு நவீன தொழில்நுடபங்களை வழங்குதல்<br>• போதைப்பொருள் கடத்தலுக்கெதிரான நடவடிக்கைகளுக்கு பொலிஸ் மற்றும் ஆயுதப் படையினரை வலுப்படுத்தல்<br>• நாட்டிலிருந்து போதைப்பொருளினை இல்லாதொழிப்பதற்கு பொது மக்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுதல் |
| | | தீங்குதரும் போதைப்பொருட்களிலிருந்து பாடசாலை சிறுவர்களைப் பாதுகாத்தல் | • போதைப்பொருளுக்கு அடிமையாகிய சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றினை உருவாக்குதல்<br>• போதைப்பொருள் பாவணைக்கு சிறுவர்களை இலகுவாகக் கவருகின்ற அனைத்து இடங்களையும் கண்காணிப்பதற்கான உரிய கண்காணிப்பு முறையொன்றினைத் தாபித்தல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | போதைப்பொருளுக்கு அடிமையான அனைவரினதும் புனர்வாழ்வினை உறுதிப்படுத்தல் | • போதைப் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குதல்<br>• நவீன சிகிச்சை வசதிகளுடன் நாடு முழுவதிலும் நான்கு புனர்வாழ்வு நிலையங்களை தாபித்தல் |
| | பாதுகாப்புச் சேவைகள் - பாதுகாப்பான வேலைச் சூழல் | ஆயுதப்படையினர், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினரின் கௌரவத்தினை மீளப்பெறுதல் | • பொய்யான குற்றச்சாட்டுக்களினால் சிறையில் வைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br>• சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள், பதவியுயர்வு விடயங்களில் காணப்படும் முரண்பாடுகளைத் திருத்துதல்<br>• முகாம் மற்றும் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>• இளைப்பாறிய உறுப்பினர்கள் உள்ளடங்களாக அனைத்து படைவீரர்களுக்குமான மருத்துவ வசதிகளை வழங்குதல் மற்றும் மேம்படுத்தல்<br>• ஐ.நா அமைதிகாக்கும் நடவடிக்கைகளில் சேவையாற்றுவதற்கான மேலதிக சந்தர்ப்பத்தினை வழங்குதல்<br>• சேவையாற்றுகின்ற, அங்கவீனமுற்ற மரணித்த படைவீரர்களின் வாழ்க்கைத் துனை அல்லது சிறுவர்கள் அனைவருக்கும் சலுகை அடிப்படையிலான வீடமைப்புக் கடன் வழங்குதல்<br>• தற்பொழுது காணப்படும் கடன் திட்டத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் தாமதங்களை இல்லாதாக்குதல்<br>• இடை நிறுத்தப்பட்ட வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல் |
| | திருப்திகரமான பொலிஸ் சேவை | அனைத்து பொலிஸ் அலுவலர்களினதும் அறிவு மற்றும் ஆற்றலினை அதிகரித்தல் | • பொலிஸ் பல்கலைக்கழகமொன்றினைத் தாபித்தல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | மிகச் சாத்தியமான நலன்புரி வசதிகளை உறுதிப்படுத்தல் | • கடமைகளைப் புரிவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குதல்<br>• பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பதிகாரியினை நியமிப்பதற்கு வெளிப்படையான திட்டமொன்றினைத் தாபித்தல்<br>• செயலாற்றுகை மீளாய்வுகள் மற்றும் தகுதியினை அடிப்படையாகக் கொண்டு பதவியுயர்வு திட்டமொன்றினைத் தாபித்தல் |
| | | | • பொலிஸ் அலுவலரொருவர் 8 மணித்தியாலங்களுக்கு அதிகம் பணியாற்றாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து ஆட்சேர்ப்பு இடைவெளிகளை நிரப்புதல் |
| | | | • தமது வீடுகளிலிருந்து வேலைக்குச் செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் போதிய வீடமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் |
| | | | • ஆயுதப்படைகளுக்கு வழங்கப்படுகின்றவாறு உணவுக் கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை அதிகரித்தல் |
| | | | • கள விசாரணைகளை மேற்கொள்கின்ற பொலிஸ் அலுவலர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குதல்<br>• தற்பொழுது காணப்படுகின்ற நலன்புரி வசதிகளில் பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்ளுதல்<br>• பொலிஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் இசை வாத்திய குழுவுக்கு தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல் |
| | சிவில் பாதுகாப்புப் படை | | • தமது மாவட்டத்திற்கு வெளியே நீண்டகாலம் சேவையாற்றுகின்ற சிவில் பாதுகாப்புப் படை உறுப்பினர்களின் இடம் மாற்றத்தினை உறுதி செய்தல் |
| | ஆயுதப் படைகளின் சேவைகளை அங்கீகரித்தல் | ஆயுதப்படையினரின் நலன்புரி வசதிகளை உறுதிப்படுத்தல் | • அங்கவீனமுற்ற படைவீரர்களின் சம்பள முரண்பாடுகளைத் திருத்துதல் மற்றும் அனைத்து நிலுவைகளையும் செலுத்துதல்<br>• நிரந்தர அங்கவீனமுற்ற படை வீரர்களுக்கான சம்பளத்தினை அவர்களது வாழ்நாள் முழுவதும் வழங்குவதுடன் மரணத்தின் பின்னர் அவர்களது தங்கிவாழ்வோர் பெற்றுக் கொள்வதை உறுதி செய்தல்<br>• அங்வீனமுற்ற படைவீரர்களின் சம்பளங்களின் அனைத்து |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | கழிப்பனவுகளையும் நீக்குதல்<br>• அபஹிமன்சள போன்ற புனர்வாழ்வு நிலையங்களை மீள அபிவிருத்தி செய்தல்<br>• யுத்தத்தில் கால்களை இழந்தவர்களுக்கு அரச செலவினத்தில் செயற்கைக் கால்களை வழங்குகின்ற முறைமையொன்றினை பின்பற்றுதல் |
| | நட்புமிக்க அணிசாரா வெளிநாட்டுக் கொள்கை | உபாய சொத்துக்கள் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வளங்களின் உரித்தினை உறுதிப்படுத்தல் | • ஆசிய நாடுகளுடன் உறுதியான வர்த்தக உறவுகளை விருத்தி செய்தல்<br>• பிராந்திய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு இந்தியா, தெற்கு ஆசிய மற்றும் BIMSTEC நாடுகளுடன் நெருக்கமான உறவினைப் பேணுதல்<br>• சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நிலைப்பாட்டினை ஏற்றுக் கொள்ளுதல்<br>• மத்திய கிழக்கு மற்றும் தெற்கிழக்காசிய நாடுகளான வியட்னாம், இந்தோனேசியா, மலேசியா போன்ற நாடுகளுடன் வர்த்தக ரீதியான உறவுகளைப் பேணுதல்<br>• கடந்த 5 வருடங்களில் கைச்சாத்திடப்பட்ட பாதிப்புமிக்க இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை மீளாய்வு செய்தல்<br>• உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு பாதகமான உடன்படிக்கைகளை தவிர்த்துகொள்ளல் |

# அத்தியாயம் - 04
# பயனுள்ள பிரசையும் மகிழ்ச்சியான குடும்பமும்

**“மனிதவள அபிவிருத்தியினூடாகப் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்ட அறிவினை நோக்கி”**

- அறிவினால் முழுமையடைந்த சமூகம்
- தாயின் அரவணைப்பிலிருந்து ஆசிரியரின் பராமரிப்புக்கு
- பாடசாலைக் கல்வியின் புத்தெழுச்சி
- பல்கலைக்கழக மற்றும் உயர் தொழிற்கல்வி
- மேற்கத்திய மருத்துவம்
- இளைஞர்களின் சக்தியினை அணிதிரட்டல்
- சக்திமிக்க இளைஞருக்கான விளையாட்டு
- அறிவு பூர்வமான இளம்பராயத்தினர்
- பெண்களின் பொருளாதார மற்றும் சமூகப் பங்களிப்பு
- விசேட ஆற்றலுடையோர்
- கௌரவமான சிரேட்ட பிரசைகளைக் கொண்ட சமூகம்
- “நாட்டுக்கான பணி”கலாசாரம்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபடும் மனிதவளம்
- ஒவ்வொரு குடும்பத்திற்கும் வசதியான இல்லம்

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| கல்வி | அறிவினால் முழுமையடைந்த சமூகம் | ஒற்றை பாடத்திட்ட முறைமையினை அறிமுகம்செய்தல் | • ஆரம்ப பாடசாலை முதல் மூன்றாம் நிலைக்கல்வி வரை சர்வதேச தரத்திற்கமைவாக கல்வி தரத்தினை மேம்படுத்தல்<br>• அனைத்துக் கல்வி நிறுவனங்களையும் ஒரு குடையின்கீழ்க் கொண்டுவருதல்<br>• பாடசாலை பாடத்திட்டத்தினை இலகுவான மற்றும் ஒப்படை அடிப்படை பாடத்திட்டமாக மாற்றுதல் |
| | பாடசாலைக் கல்வியின் புத்தெழுச்சி | தர மேம்பாடு | • மாவட்ட கோட்டாவுக்கு மேலதிகமாக பாடசாலையினை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான புதிய விஞ்ஞான முறைமையினை அறிமுகம் செய்தல்<br>• 6 ஆம் வகுப்பில் நுண்ணறிவுப் பரீட்சை மற்றும் அவர்களுக்குத் தேவையான ஆற்றல் மற்றும் மரபு வழி ஆற்றல்களுக்கமைய உயர் கற்கைகளுக்காக வழிகாட்டுதல் |
| | | ஆசிரிய பயிற்சி மற்றும் உயர்தொழில் அபிவிருத்தி | • தற்பொழுது காணப்படும் பதினெட்டு (18) தேசிய கல்விக் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்<br>• ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கல்வி நிர்வாக அலுவலர்களை இணைப்பதன் மூலம் பிரத்தியேகமானதொரு சேவையினை உருவாக்குதல்<br>• தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆசிரிய இடமாற்றத்தினை முன்னெடுப்பதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை செய்தல் |
| | | பாடசாலை முறைமையில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி | • கிராமிய பாடசாலைகளுக்கு தேவையான நவீன தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளங்களினை ஏற்பாடு செய்தல்<br>• பிரதேச செயலக பிரிவொன்றுக்கு 3 பாடசாலைகளை தரம் உயர்த்துவதன் மூலம் கொத்தணி பாடசாலை முறைமையினை அறிமுகம் செய்தல்<br>• முதல் இரண்டு வருடங்களுக்குள் நாடு முழுவதிலும் "மும்மொழி, மாதிரி இரண்டாம் நிலை தேசிய பாடசாலை" இருபதினை உருவாக்குதல்.<br>• ஆரம்ப பாடசாலைகளை "சிறுவர் நட்பு பாடசாலைகள்" ஆக அபிவிருத்தி செய்தல் மற்றும் போதியளவு மனித வளங்களை வழங்குதல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | • அரச தனியார் பங்களிப்பு மாதிரிகளின் கீழ் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பாடசாலை போக்குவரத்து சேவையினை உருவாக்குதல் |
| உயர் கல்வி | உயர் கல்வியில் சிறப்புத் தேர்ச்சி | தகைமையுடைய அனைத்து மாணவர்களும் தமது உயர்கல்வியினை பட்டப்படிப்புவரை தொடருதல் | • அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் ஸ்மாா்ட் கற்றல் பல்கலைக்கழக்ங்களாக மாற்றுவதுடன் அதிகளவு தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்குவதற்கு தொழில்நுட்ப பீடங்களை ஆரம்பித்தல்<br>• விமான மற்றும் சமுத்திரவியல் பல்கலைக்கழகமொன்றினை தாபித்தல்<br>• புதிய பாடநெறிகளை தொடர்வதற்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேவையான நிதி வழங்கல் மற்றும் வட்டி அல்லாத கடன் திட்டத்தினை அறிமுகம் செய்தல்<br>• தற்குமிட வசதிகளை வழங்குவதற்கு தனியார் மற்றும் அரச பங்குபற்றல் மாதிரியினை அறிமுகம் செய்தல்<br>• தற்பொழுதுள்ள நுண்கலைப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்ததாக 10 "பல்கலைக்கழகக் கல்லூரிகள்" தாபிக்கப்படும்<br>• தொலைக்கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்கு திறந்த பல்கலைக்கழக கல்விமுறை விரிவாக்கப்படும்<br>• அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் சமுத்திரவியல் பல்கலைக்கழகம் மற்றும் கொத்தலாவள பாதுகாப்பு பல்கலைக்கழகம் என்பவற்றினை சர்வதேச தரத்திற்கமைவாக தரமுயர்த்தல் மற்றும் விரிவாக்கல்<br>• பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து பகிடிவதை கலாசாரத்தினை இல்லாதொழித்தல் |
| தொழில் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி | ஆற்றல்மிக்க சமூகமொன்றினை நோக்கி | ஊழியப்படையில் திறமையற்ற வகுதியினை குறைப்பதற்கு துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்காக | • கல்வி செயலாற்றுகையினை கவனத்திற் கொள்ளாது தேவையுடைய மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வாய்ப்புகளை வழங்குதல்<br>• "ஒரே தொழில்நுட்ப தொழிற்பயிற்சி கல்வி பயிற்சி" எண்ணக்கருவினை அறிமுகப்படுத்துவதன் மூலம் தற்பொழுதுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதுடன் முறையான தொழில்நுடப பல்கலைக்கழகக் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | பயிற்றப்பட்ட, துடிப்பு மிக்க ஊழியர் படை | கல்லூரிகளை தாபித்தல்<br>• தற்பொழுதுள்ள தேசிய தொழிற்றகைமைச் சான்றிதழ் 7 முதல் 10 வரை அதிகரித்தல் மற்றும் அதற்கமைய இலங்கை தகைமை வேலைச்சட்டகத்தினை (SLQF)திருத்துதல்<br>• தற்பொழுதுள்ள ஊழியப்படைக்கு தமது ஆற்றல்களினை தரமுயர்த்துவதற்கான வாய்ப்பினை வழங்குதல் |
| மேற்கத்திய மருத்துவம் | நோயாளிக்கு சிகிச்சை அளிப்பதற்குப் பதிலாக வாழ்க்கை முறையினை ஊக்குவிக்கும் நடைமுறையினை மாற்றியமைத்தல் | சுவ திவ்மக நிகழ்ச்சித்திட்டத்தினைச் செயற்படுத்தல் | • விவசாய இரசாயணமற்ற ஆரோக்கிய உணவினை ஊக்குவித்தல்<br>• இயற்கை உணவு உற்பத்தியினை ஊக்குவித்தல்<br>• அனைத்து வயதினருக்கும் முறையான உணவு பழக்கத்தினை ஊக்குவித்தல்<br>• பேண்தகு சுற்றாடல் கொள்கையினூடாக வளி, நீர், மற்றும் மண் மாசடைவினை தடுப்பதன் மூலம் ஆரோக்கியமான சூழல் ஒன்றினை உருவாக்குதல் |
| | சுகாதார நலன்புரிக்கான வருடாந்த முதலீட்டினை அதிகரித்தல் | சுகாதார பராமரிப்பு வசதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினைச் செயற்படுத்தல் | • சுகாதார பராமரிப்புச் சேவைகளை வசதியாகவும் காத்திருப்புப் பட்டியல், நீண்ட வரிசை மற்றும் சனநெரிசலின்றி பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்<br>• இலங்கை தேசிய வைத்தியசாலைகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்துதல்<br>• இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு ஒத்ததான ஒரு வைத்தியசாலையினை ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்து தரமுயர்த்துவதுடன் உபகரணங்களையும் வழங்குதல்<br>• அனைத்து வைத்தியசாலைகளையும் தேவையான வசதிகள், மனித வளங்கள் போன்ற பௌதீக வளங்களை வழங்குவதன் மூலம் தரமுயர்த்துதல் உசாத்துணை முறைமையினை அறிமுகப்படுத்தும் அதேவேளை இவ்வைத்தியசாலைகளுக்கு வெளிநோயாளர் சேவை அனைத்தினையும் ஒதுக்கீடு செய்தல்<br>• இலத்திரனியல் சுகாதாரம், தொலை மருத்துவம் போன்ற நவீன மருத்துவ நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை வசதிகளை அறிமுகப்படுத்தல்<br>• வைத்தியர்களை நாட்டில் வைத்துக் கொள்வதற்கான வசதிகளை |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | மேம்படுத்தல்<br>• அனைவருக்கும் பாதுகாப்பான சூழலினை உறுதிப்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் சுகாதாரப் பராமரிப்பு வசதிகளில் ISO தராதரத்தினை உருவாக்குதல்<br>• வைத்தியசாலைகள், மருத்துவ நிலையங்கள், ஆய்வு கூடங்கள், சேவைகள் அனைத்துக்குமான ஒழுங்குபடுத்துகை அதிகாரசபையொன்றினை தாபிப்பதுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட தராதரங்களைப் பேணுதல்<br>• அத்தியவசிய மருந்துப் பொருட்கள் மற்றும் வழங்கல்களின் கட்டாய கையிருப்பு மட்டத்தினைப் பேணுதல்<br>• மருந்துப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரக் கட்டுப்பாட்டுடன் போதிய உபகரணங்களுடன் ஆய்வுகூடமொன்றினை உபகரணமொன்றினை |
| | | இலங்கைப் பிரசைகளின் சுகாதாரத்திற்காக அரசாங்கத்தின் முழுமையான நிதியினை செலவிடுதல் | • வெளிநாட்டவர்களுக்கு அரசாங்க சுகாதார பராமரிப்பு வசதிகளை இலவசமாக வழங்குவதனை வரையறைத்தல் |
| சுதேச மற்றும் ஆயுர்வேத முறைமை | விஞ்ஞானபூர்வமான மற்றும் நவீன நடைமுறைகளின் ஊடாக இம்முறைமையினை தரமுயர்த்தல் | சுதேச மருத்துவத்துறைக்கான வருடாந்த ஒதுக்கீட்டினை அதிகரித்தல் | • தேசிய சுதேச மருத்துவப் பேரவை மற்றும் இலங்கை மருத்துவ ஆயுர்வேத பேரவையினைத் தாபித்தல். மேலும், பாரம்பரிய வைத்தியர்களை சுதேச மருத்துவர்களாக பதிவு செய்வதற்கான முறைமையொன்றினை உருவாக்குதல்<br>• ஆயுர்வேத வைத்தியசாலைகளை உரிய தராதரத்துடன் மேம்படுத்துவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல், நோய்த்தடுப்பு பராமரிப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் ஆயுர்வேத மருத்துவர்களுக்கான வசதிகளை வழங்குதல்<br>• சுதேச மருந்துப் பொருட்கள் மற்றும் சிகிச்சை வசதிகள் தொடர்பான ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதுடன் அவற்றினைப் பதிவு செய்வதற்கான முறைமையொன்றினை உருவாக்குதல்<br>• மருத்துவ தாவரங்கள், மூலிகைத் தோட்டங்கள் என்பவற்றினை செய்கை பண்ணுவதற்கு வசதிகளை வழங்குவதுடன் மூலிகை அழகுசாதன பொருட்களின் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதிக்கு வசதியளித்தல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | • ஆயுர்வேத மருத்துவ நிறுவனத்தினை ஆயுர்வேத பல்கலைக்கழகத்தின் தரத்திற்கு உயர்த்துதல்<br>• ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் தயாரிப்பினை தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்<br>• ஆயுர்வேத, சித்த, ஹோமியாபதி மற்றும் ஏனைய சர்வதேச சிகிச்சை முறைமைகளுக்கு சுற்றுலா பயணிகளைக் கவருவதற்கான உபாய வழிமுறையினை உருவாக்குதல் |
| இளைஞர் அலுவல்கள் | இளைஞர்களின் சக்தியினை அணிதிரட்டல் | இளைஞர்களின் முழு ஆற்றலினையும் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான நிகழ்ச்சித் திட்டங்களையும் அவர்களது அபிலாசைகளையும் இனங்காணல் | • அரசியல் தீர்மானம் எடுத்தலில் இளைஞர்களின் பங்குபற்றுதலினை அதிகரித்தல்<br>• இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான விரிவான வாய்ப்புக்களையும் ஊக்குவிப்புகளையும் வழங்குதல்<br>• வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தொழில் வாய்ப்புகளுக்கான இளைஞர்களை இனங்காண்பதற்கு இளைஞர் மனிதவள தரவு வங்கியொன்றினை தாபித்தல் |
| விளையாட்டு | துடிப்பான தேசத்திற்கான விளையாட்டு | பலமிக்க, ஆரோக்கிய மற்றும் ஒழுக்க விழுமியமுள்ள தேசத்தினை உருவாக்குதல் | • விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்குகின்ற பாடசாலை சிறுவர்களுக்கான போசாக்குணவு, பயிற்சி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்<br>• சர்வதேச தரத்துடன் கூடிய விளையாட்டுப் பல்கலைக்கழகமொன்றினை தாபித்தல்<br>• தாபிக்கப்பட்ட / தரமுயர்த்தப்பட்ட மாகாண மட்ட விளையாட்டரங்கு<br>• பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் உடற்பயிற்சியாளர்கள் போன்ற விளையாட்டுத்துறை உயர் தொழில்புரிநர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு வசதிகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குதல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| சிறுவர் பராமரிப்பு | அறிவுமிக்க இளம்பராயத்தினரை உருவாக்குதல் | ஆரோக்கியமான உற்பத்திதிறன் மிக்க பிரசைகளாக இருப்பதற்கு சிறுவர்களை வழிகாட்டுதல் | • குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்காக நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்<br>• நீதி, சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள், பாதுகாப்பு போன்ற அமைச்சுக்களுடனும் அதேபோன்று தொடர்புடைய அரச நிறுவனங்களுடனும் இணைந்து சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் மற்றும் அனைத்து விதமான வன்முறைகளையும் தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்<br>• சிறுவர்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளை எவ்வித தாமதமுமின்றி தீர்ப்பதற்கு ஒவ்வொரு மாவட்ட நீதிமன்றத்திலும் விசேட பிரிவொன்றினைத் தாபித்தல்<br>• சிறுவர் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நிலையங்கள், நிறுவனங்களிலுள்ள அனைத்து சிறுவர்களுக்குமான "வளர்ப்பு குடும்ப முறைமை" ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றினை |
| மகளிர் அலுவல்கள் | பொருளாதார ரீதியிலும் சமூக மட்டத்திலும் பெண்களை வலுவூட்டல் | அபிவிருத்தித் திட்டங்களுக்கு பெண்களின் பங்களிப்பினை ஒன்றுதிரட்டல் | • ஊழியப்படையில் பெண்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு சிறுவர் பராமரிப்பு வசதிகளை ஒழுங்குபடுத்தல், தரப்படுத்தல் மற்றும் விரிவாக்கல்<br>• இளம் தாய்மார்களுக்கான நெகிழ்ச்சித்தன்மையான தொழில் ஏற்பாட்டினை அறிமுகம் செய்தல்<br>• கிராமிய பெண்களுக்குத் தேவையான உதவிகளை வீட்டினை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சிகளை அறிமுகம் செய்தல்<br>• பெண்களுக்கான பால் ரீதியான அனைத்து விதமான வன்முறைகளையும் குறைத்தல் மற்றும் 24 மணிநேர ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனை உதவி தொலைபேசி இணைப்பொன்றினை உருவாக்குதல் |
| சமூகப் பாதுகாப்பு | மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை உறுதிப்படுத்தல் | அவர்களது முழுமையான ஆற்றலினை புரிந்து கொள்வதற்கு சமமான வாய்ப்புகளை வழங்குதல் | • கல்வியைப் பெற்றுக் கொள்ளல், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்களில் கற்றல் மற்றும் பரீட்சைக்குத் தோற்றுதல், என்பவற்றில் மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்குவதற்கான வசதிகளை அறிமுகம் செய்தல்<br>• மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட திறன் / உயர்தொழில் பயிற்சி என்பவற்றினை வழங்குதல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | • மாற்றுத்திறனாளிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அழைப்பு நிலையங்களை உருவாக்குதல்<br>• செய்தி ஒலி, ஒளி பரப்பின் போது சைகை மொழிப்பயன்பாட்டினை பயன்படுத்துவதற்கு அனைத்து தொலைககாட்சி ஊடகங்களையும் ஊக்குவித்தல் |
| முதியோர் பராமரிப்பு | மரியாதைக்குரிய சிரேட்ட பிரசைகளைக் கொண்ட சமூகம் | கௌரவத்துடன் வாழ்வதற்கு முதியோருக்கு முடியுமான நலன்புரி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் | • வயது முதிர்ந்தவர்கள் எதிர்நோக்கும் சவால்களை பயன்வலு மிக்க முறையில் முறியடிப்பதற்காக ஐந்து வருடத் திட்டமொன்றினைச் செயற்படுத்தல்<br>• தமது அறிவு மற்றும் அனுபவங்களை எதிர்கால சந்ததியினரிடம் பரிமாறுவதற்கு முடியுமான வகையில் "தொண்டு சேவை படையணி" ஒன்றினை உருவாக்குதல்<br>• தற்பொழுது காணப்படும் ரூபா 2,000 வயோதிபர் உதவு நிகழ்ச்சித்திட்டத்தில் கழிக்கப்பட்ட 100 ரூபாவினை சேர்ப்பதுடன் மாதாந்தக் கொடுப்பனவினை ரூபா 2,500 ஆக அதிகரித்தல்<br>• 65 வயதிற்கு மேற்பட்ட சிரேட்ட பிரசைகளுக்கு ஒவ்வொரு ஆறு மாதத்திலும் இலவச சுகாதார பரிசோதனை மற்றும் குறித்துரைக்கப்பட்ட மருந்துப் பொருட்களின் கொள்வனவு என்பவற்றுக்கான மானியத் திட்டமொன்றினை அறிமுகம் செய்தல்<br>• முதியோர் இல்லங்களுக்கான நியமங்களை அறிமுகம் செய்தல்<br>• சிரேட்ட பிரசைகள் தாம் பின்பற்றும் சமயங்களுக்கமைய வெளிநாட்டிலுள்ள சமயஸ்தளங்களுக்கு யாத்திரிகை செல்வதற்கான குறைந்த வட்டியுடன் கூடிய கடன் வழங்கல் |
| அரசாங்க சேவை | "நாட்டுக்கான பணி" கலாசாரம் | மக்கள் மைய அரச சேவையொன்றினை தாபித்தல் | • சுயாதீனமான அரச சேவையொன்றினை உறுதிப்படுத்துவதற்கு புதிய "நடத்தைக் கோவை" ஒன்றினை அறிமுகம் செய்தல்<br>• தொழில் வாய்ப்பினை இழக்கின்ற தனியார் மற்றும் அரசதுறை ஊழியர்களுக்கான காப்புறுதித் திட்டமொன்றினை அறிமுகம் செய்தல்<br>• அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தொழில்வழங்குநரின் பங்களிப்பினை 12 சதவீதத்திலிருந்து 15 |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | சதவீதமாக அதிகரித்தல்<br>• தமது பணிகளை சிறந்த நல்லெண்ணத்துடன் முன்னெடுக்கின்ற அரசாங்கத் திணைக்களங்கள், அரச சார்பு கூட்டுத்தாபனங்கள் மற்றும் வங்கிகளின் அலுவலர்களை பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை உருவாக்குதல்<br>• உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளடங்களாக அரச சேவையிலுள்ள குறைந்த தர ஊழியர்களுக்கு சுகாதார பராமரிப்பு கொடுப்பனவினை வழங்குதல்<br>• தகைமையுடைய விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை விரைவுபடுத்துதல் |
| தனியார் துறை | தனியார்துறை ஊழியர்களைப் பாதுகாத்தல் | வேலை செய்கின்ற சூழலொன்றினை உருவாக்குதல் | • தனியார்துறை ஊழியர்களின் தற்பொழுது காணப்படும் ஆகக் குறைந்த கொடுப்பனவான ரூபா 10,000 இனை ரூபா 2,500 இனால் அதிகரித்தல்<br>• தொழில் திணைக்களத்திற்கு ஒரு வாரத்திற்குள் புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யுமாறு அறிவிப்பது கட்டாயமானதாகும்.<br>• தனியார்துறை வேலைவாய்ப்புக்கான பொருத்தமான சூழலினை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய சட்டவாக்கத்தினை திருத்துதல் |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு | இடம்பெயர் ஊழியப்படையினை போற்றுதல் | ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டுப் பணியாளர்களை ஊக்குவித்தல் | • “விலக்களிப்பு ஊழியர்கள்” இன் வருமானங்கள் அதேபோன்று சம்பாத்தியங்கள் மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் சேமிப்புகளுக்கு வருமான வரியிலிருந்தும் வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்குகள் வரியல்லாதவையாக மாற்றப்படும்<br>• வெளிநாட்டு வேலைவாய்ப்பின் பின்னர் இலங்கைக்கு திரும்புபவர்களுக்கு வரி விலக்கு தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு விசேட கடன் வசதியொன்று அறிமுகப்படுத்தப்படும்.<br>• தொடர்ந்து 10 வருட காலப்பகுதிக்கு வருடந்தோறும் 50,000 ஐ.அ.டொலரினை இலங்கைக்கு அனுப்புகின்ற வெளிநாட்டு ஊழியர்களுக்கு தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குதல்<br>• 6 வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் வெளிநாட்டில் தொழில்புரிந்த ஊழியர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றினை அறிமுகம் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | செய்தல்<br>• திறமையற்ற ஊழியர்களுக்குப் பதிலாக திறமையான ஊழியர்களை வெளிநாட்டு தொழிலுக்காக அனுப்புகின்ற நிகழ்ச்சித் திட்டமொன்றினை அறிமுகம் செய்தல்<br>• வெளிநாட்டில் வேலைத்தளங்களில் விபத்துக்குள்ளானவர்களுக்கு நட்டஈடு பெற்றுக் கொள்கின்ற செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு சட்ட மறுசீரமைப்பினை அறிமுகம் செய்தல் |
| வீடமைப்பு | ஒவ்வொரு குடும்பத்திற்கும் வசதியான இல்லம் | பல்தரப்பு நடைமுறைகளினூடாக வீடமைப்பு வசதிகளை வழங்குதல் | • வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டத்தின் ஊடாக தேவையுடையோருக்கு வீடுகளை வழங்குதல்<br>• வீடமைப்பு நிர்மாணக் கம்பனிகளுக்காக நியாயமான விலைகளில் காணிகளை வழங்குதல்<br>• நாடு முழுவதிலும் அரச தனியார் பங்களிப்புத் திட்டத்தின் கீழ் விசேட வீடமைப்பு கருத்திட்டங்களைச் செயற்படுத்தல்<br>• இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் சேரிப்புரங்களில் வாழ்கின்றவர்களுக்காக வீடமைப்புத் திட்டங்களில் வீடுகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம் நாடுமுழுவதிலும் செயற்படுத்தப்படும்<br>• வீடமைப்பதற்கான காணிகள் வரையறுக்கப்பட்ட கிராமிய விவசாயப் பிரதேசங்களில் அனைத்து வசதிகளுடன் வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணித்தல்<br>• வீடமைப்புத் துறைக்காக பிரத்தியேகமான கடன்களை வழங்குகின்ற வங்கிகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ஒரு வீடமைப்பு வங்கியாக இணைத்து இவ்வங்கியின் மூலம் குறைந்த வட்டிக் கடன்களை வழங்குவதற்கான முறைமையொன்றினை அறிமுகம் செய்தல் |

# அத்தியாயம் -05
# மக்களை மையப்படுத்திய பொருளாதாரம்

## பொது நோக்கு

தற்போதைய மற்றும் எதிர்காலச்சந்ததியினர் நன்மை பெறும் பொருட்டு தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்றினை உருவாக்குவதற்கு கீழ்வருவன உள்ளடக்கப்படும்.

- ➢ உறுதிப்படுத்தப்பட்ட பொருளாதார வளங்களுக்கான மக்களின் உரிமை
- ➢ வலுப்படுத்தப்பட்ட உள்ளூர் தொழில் முயற்சியாண்மைகள்
- ➢ பிரதான தேசிய சொத்துக்கள் பாதுகாக்கப்படும்

### பேரண்டப் பொருளாதாரக் கொள்கைச்சட்டகம்

- ➢ கடன் பொறியில் இருந்து விடுபடல், உள்நாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், இறக்குமதிச் செலவினைக் குறைத்தலும் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரித்தலும்.

- ➢ பாதீட்டுப் பற்றாக்குறையைக் குறைத்தல்: அரசாங்கத்தின் தேவையில்லாத செலவுகளை இல்லாமற் செய்யும் அதேவேளை அரச முதலீடுகளை முன்னுரிமைப்படுத்திபிரதான செலனங்களுக்கு நிதியிடல்.

- ➢ வர்த்தக நிலுவையைக் குறைத்தல்: வெளிநாட்டுக் கடனில் தங்கியுள்ள பொருளாதாரத்திற்கு பதிலாக உள்நாட்டு வளங்களை அடிப்படையாக் கொண்ட ஏற்றுமதியை ஊக்குவித்தல், இறக்குமதிப் பதிலீட்டு உற்பத்தி விரிவுபடுத்துதல் மற்றும் பெறுமதி சேர் தொழிற்சாலைகளை அதிகரித்தல்.

- ➢ உள்ளூர் உற்பத்திகளைஊக்குவிப்பதற்கு உடனடியாக மூலப்பொருள் மற்றும் இடையீட்டுப் பொருள் இறக்குமதிக்கான தீர்வையைக் குறைத்தல்.

**பேரண்டப் பொருளாதார இலக்குகள் 2020-2025**

- 6.5 சதவீதம் அல்லது அதிகமான சராசரி பொருளாதார வளர்ச்சி வீதம்.
- 6,500 ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமான தனிநபர் வருமானம்.
- 4 சதவீதத்திலும் குறைவான வேலையற்றோர் விகிதம்.
- 5 சதவீதத்தினைத் தாண்டாத வருடாந்த பணவீக்க விகிதம்.
- மொத்தத் தேசிய உற்பத்தியின் 4 சதவீதத்திலும் குறைவான பாதீட்டுப் பற்றாக்குறை.
- தனி இலக்கத்தைக் கொண்ட வட்டி வீதம்
- ரூபாவின் பரிமாற்றப் பெறுமதியினை நிலையான மட்டத்தில் பேணல்.

- சர்வதேச போட்டித் தன்மையுடன் முன்னெடுத்துச்செல்லக்கூடிய வகையில் தேவையான இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களுக்கு எந்தவித இறக்குமதித் தீர்வையும் அறவிடாது விடல்.
- மத்திய வங்கியின் திரவத் தன்மையுடன் கூடிய நிதியம் ஊடாக அச்சுறுத்தல் அதிகம் உள்ள நிதி நிறுவனங்களை மீண்டும் நிலையான தன்மைக்கு மாற்றி அமைக்கப்படுதல்.
- உணவுப்பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.

## துரித நிவாரணத்திட்டம்

- வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதற்கும் உள்நாட்டு உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்கும் சிநேக பூர்வமான இலகுவான வரிமுறைமையை அறிமுகப்படுத்துதல்.
- கிராமிய மற்றும் நகரப் பிரதேசங்களில் வாழ்வாதாரங்களை விரிவுபடுத்ததுதல் மற்றும் பிள்ளைகளின் போசாக்கு நிலையினை மேம்படுத்துதல், வரிச் சுமையை குறைக்கும் துரித பயன்கள் மூலம் மக்களின் வாழ்க்கைச் சுமையை இலகுபடுத்தல்.
- ஏற்றுமதி இறக்குமதி நிர்மாணத்துறை சிறிய மற்றும் நடுத்தரளவிலான வர்த்தகம் விவசாயம் போன்ற துறைகளை முன்னேற்றுவதற்கு தேவையான சலுகை வட்டிக்கடன் வழங்கும் தேசிய அபிவிருத்தி வங்கி உருவாக்கப்படுதல்.
- முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதன் ஊடாக பங்குச் சந்தையை மீள எழுப்பல்.

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| விவசாயம் | • புதிய தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்கள் ஊடாக விவசாய அபிவிருத்தி<br>• பாதுகாப்பான உணவினைப் பெற்றுக் கொள்ளும் மக்களின் உரிமையை உறுதிப்படுத்தித் தேசத்தைக் கட்டியெழுப்புதல்<br>• புதிய தொழினுட்பங்களின் அனுசரணையுடன் பல்வேறு பெறுமதி சேர் உற்பத்திகளின் ஊடாக சர்வதேச ஏற்றுமதி வியாபாரம் | தற்போதைய கொள்கைகளை மீளாய்வு செய்வதன் மூலம் "புதிய தேசிய விவசாயக் கொள்கையை" அறிமுகப்படுத்துதல் | ***விவசாயிகளின் நலன்புரியினை உறுதிப்படுத்துதல்***<br>• விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தை மீண்டும் ஏற்படுத்துதல்<br>• கவர்ச்சிகரமான காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்<br>• பயிர் முகாமைத்துவக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துதல்<br>• விவசாயிகளுக்கு இலகுவான குறைந்த வட்டியுடைய விவசாயக்கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல்<br>• புதிய பயிர்க்காப்புறுதித்திட்டத்தினை அறிமுகப்படுத்துதல் |
| | | பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினரின் ஆற்றல்கள் மற்றும் திறன்கள் பெறப்படும். | ***நில உற்பத்தியை அதிகரித்தல்***<br>• காணிகளை அதியுயர் பயனுள்ள வகையில் விவசாயத் துறையில் பயன்படுத்துவதற்கு துரிதத் திட்டங்கள் வகுத்தல்<br>• மண் வளத்திற்கான ஒருங்கிணைந்த தொழில்நுட்ப முறையொன்று அறிமுகப்படுத்தல் |
| | | விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கு சிறந்த விதைகளையும் விளைபொருட்களையும் வழங்குதல்<br><br>எதிர்வரும் 10 வருடங்களில் சேதன விவசாயத்தினை ஊக்குவித்தலும் பிரபலப்படுத்தலும் | ***விவசாயப் புத்தாக்கம்***<br>• சுற்றாடல் நேய அறிமுகப்படுத்துதல்<br>• அதி உச்ச நீர்ச் சிக்கனப் பயன்பாடு<br>• நீர்ப்பம்பி மற்றும்சூரிய சக்தியினால் செயற்படும் உபகரணங்களுக்கு வரிவிலக்களிக்கப்படுதல்.<br>• அதியுயர் தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி உயர் பயனை பெறுவதற்கு பிராந்திய ரீதியில் கூட்டுறவு விவசாய உற்பத்தி முறை அறிமுகப்படுத்தப்படுதல்.<br>• ஏனைய பயிர்கள் (செத்தல் மிளகாய், சோளம், சோயா, பயறு, கௌப்பி, வெங்காயம், கிழங்கு) போன்ற உணவுப் பொருட்களை |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | உற்பத்தி செய்வதற்கு முறையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுதல். |
| | | | ***இளைஞர் தொழில் முயற்சியாண்மைகளை ஊக்குவித்தல்***<br>• இறக்குமதித் தீர்வைச் சலுகையும் குறைந்த வட்டியில் கடன் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படுத்தல்.<br>• இளைஞர் தொழில் முயற்சியாண்மைகளை கட்டியெழுப்புதல். |
| | | | ***உரப்பயன்பாட்டில் புரட்சி***<br>• உர மானியத்திற்கு பதிலாக மாற்று முறைமையை அறிமுகப்படுத்தல்.<br>• விவசாயிகளுக்கு தேவையான உரம், சேதனப் பசளை ஆகியவற்றை இலவசமாக வழங்கல்.<br>• பாரம்பரிய விவசாயக் கிராமங்கள் சேதனப் பசளையினை மட்டும் பயன்படுத்தும் வகையில் ஊக்குவித்தல்.<br>• சேதனப் பசளையினை பயன்படுத்தும் 20 லட்சம் வீட்டுத்தோட்டங்களை முன்னெடுத்தல்.<br>• அத்தியாவசியமான உர வகைகளை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தல்.<br>• இயற்கை காடுகள் மற்றும் ஈர வலயங்களின் உதவியுடன் உரம் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி செய்தல்.<br>• முறையான குப்பைக்கூள முகாமைத்துவ முறையை ஆரம்பித்தல். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | ***விதைகள் மற்றும் விளைபொருட்கள் உற்பத்தி***<br>• சர்வதேச தரமான விதை உற்பத்திக்காக உள்ளூர் விதைக் கொள்கையை அறிமுகப்படுத்தல்.<br>• இறக்குமதி செய்யப்படும் விதைகளின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு தரச் சான்றிதழ்கள் கட்டாயமாக்கப்படுதல்.<br>• உயர் விளைச்சலைத் தரக்கூடிய விதைகளையும் விளை பொருட்களையும் பாரிய அளவில் உற்பத்தி செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவித்தல்<br>• விதை பாதுகாப்பிற்காக விவசாய அமைச்சின் கீழ் விதை வங்கியொன்று ஏற்படுத்தப்படுதல். |
| | | | ***பொதியிடல் மற்றும் களஞ்சியப்படுத்தல்***<br>• பெறுமதி சேர்த்தல், தயார் படுத்தும் பணிகளுக்கு தேவையான இயந்திர இறக்குமதிகளுக்கு வரிவிலக்கு அளித்தல்.<br>• மேலதிக உற்பத்திகளை களஞ்சியப்படுத்துவதற்கு வசதிகள் செய்தல்<br>• மேலதிக அறுவடைகளை பாரிய அளவில் களஞ்சியப்படுத்துவதற்குரிய இடங்கள் அடையாளம் காணப்படல். |
| | | | *சந்தைப்படுத்தல் மற்றும் போக்குவரத்து*<br>• உற்பத்தியாளர்கள், ஏற்றுமதி கம்பனிகள், தயார்படுத்தும் நிறுவனங்கள், மொத்த சந்தை கம்பனிகள் ஆகியவற்றிற்கு இடையேமுன் ஒப்பந்த முறையை ஊக்குவித்தல்<br>• புதிய மூலோபாயத் திட்டம் ஒன்றை பொருட்கள் சந்தைப்படுத்தலுக்காக ஏற்படுத்தல்<br>• நிலையான சந்தை விலையை பேணுவதற்கு உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய விவசாய உற்பத்திகளின் இறக்குமதியை மட்டுப்படுத்தல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | • குறித்த உற்பத்திகளினால் நாட்டை தன்னிறைவடையச் செய்தல்<br>• சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சேதன விவசாய உற்பத்திக்காக சான்றிதழ் முறைமையை அறிமுகப்படுத்தல்.<br>• இலங்கை தரக் கட்டளை நிறுவகத்தை அதற்கு பொருந்தக்கூடிய வகையில் மேம்படுத்தப்படுதல்.<br>• அறுவடையின் போதும்,போக்குவரத்து, விநியோகத்தின் போதும் ஏற்படும் வீண்விரயத்தை தடுப்பதற்காக அரச மற்றும் தனியார் துறை இணைந்த புதிய வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தல்.<br>• பொருட்களை ஏற்றிச் செல்வதற்குப் புகையிரத வண்டிகளைப் பயன்படுத்தலைஅதிகரிப்பதற்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி தேவையான பாதுகாப்பான புதிய புகையிரதப் பெட்டிகளை அறிமுகப்படுத்தல். |
| | | | ***விவசாய புத்தாக்க ஆராய்ச்சி***<br>• பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஆராய்ச்சிக்கான வசதிகளை மேம்படுத்த விவசாய அமைச்சில் வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் ஒரு தொகை ஒதுக்குதல்.<br>• வர்த்தக நாமத்தின் கீழ் புத்தாக்க உற்பத்திகளைச் செய்வதற்குத் தேவையான உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அறிமுகப்படுத்தல்.<br>• புத்தாக்க உயிரியல் பீடை கொல்லிகள் மற்றும் குறைந்த செலவிலான ஒருங்கிணைந்த கிருமிநாசினி முகாமைத்துவ முறைகளை ஊக்குவிப்பதற்கு அனுசரணை வழங்குதல்.<br>• ஆராய்ச்சியாளர்களுக்கு புத்தாக்கத்திற்கான புத்தாக்க காப்புரிமையைப் பெற காப்புரிமை முறைமையை உருவாக்கல்.<br>• விவசாயக் கல்வியை விரிவுபடுத்துவதற்கும், விவசாயக் கல்லூரி தொழில்நுட்பத்தினால் தேவையான வசதிகள் செய்து கொடுத்தல். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
| --- | --- | --- | --- |
| | | | • உள்ளூர் நிறுவனங்களை சர்வதேச விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுத்துவதற்காக தேவையான இராஜதந்திர உறவுகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல்.<br>• விவசாய ஆராய்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும் தனியார் முயற்சியாளர்களுக்கு வரிச்சலுகை அளித்தல். |
| | | | ***நெற்செய்கையாளர்களுக்கு உதவல்***<br>• விவசாயிகளின் விளைச்சலுக்கு நியாயமானதும் நிலையானதுமான விலையை வழங்கல்.<br>• நெற் சந்தைப்படுத்தும் சபையின் ஊடாக தாமதமின்றி நெல்லை கொள்வனவு செய்யும் வகிபாகத்தினை விரிவாக்கல். |
| | | | ***ஏற்றுமதி பயிர்ச்செய்கை***<br>• மானியம் மற்றும் உத்தரவாத விலை முறைமை.<br>• சிறிய மற்றும் நடுத்தர அளவான ஏற்றுமதிப் பயிர்செய்கையாளர்களுக்கு சலுகை விலையில் உரத்தை வழங்குதல்.<br>• ஏற்றுமதிப் பயிர்களை மீள் பயிரிடுவதற்காக சலுகை கடன் திட்டம்.<br>• சர்வதேச தரத்தில் தர பரிசோதனை முறையொன்றை அறிமுகப்படுத்துவதுடன் பூகோள ரீதியாக தரவு சான்றிதழ் ஒன்றும் வழங்குதல்.<br>• தேயிலை இறப்பர் தெங்கு செய்கைக் காணிகள் துண்டுகளாக பிரிக்கப்பட்டு குடியிருப்புகளாக மாற்றுவதை முற்றாக தடை செய்தல். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | ***தேயிலைச் செய்கை***<br>• இலங்கைத் தேயிலையில் உள்ள தரத்தை பாதுகாக்கும் மற்றும் மேம்படுத்தும் முறையொன்றை அறிமுகப்படுத்தல்.<br>• எமது தேயிலையை தூய இலங்கைத் தேயிலை என சர்வதேச சந்தையில் பிரபல்யப்படுத்தல்.<br>• பாரியளவிலான மொத்த ஏற்றுமதிக்கு பதிலாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தியாக தேயிலை ஏற்றுமதியை முன்னெடுத்தல்.<br>• இழந்துள்ள சர்வதேச தேயிலை சந்தையை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அரச தனியார் துறைகளை இணைந்து செயற்பட ஊக்குவித்தல்.<br>• சேதன தேயிலைச் செய்கையை ஊக்குவித்தல்.<br>• செய்கையின் தரம் மற்றும் விளைச்சலை மேம்படுத்துவதற்கு காலநிலை மாற்றங்கள் போன்ற சவால்களுக்கு முகம்கொடுப்பதற்கு ஏற்ற தீர்வுகளை வழங்குதல், உற்பத்தி மற்றும் பயிர்த்தர மேம்பாடு, புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல், தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தை மீள்கட்டமைத்தல். |
| | | | ***இறப்பர்ச் செய்கை***<br>• குறுகிய காலத்தில் பாலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய முறைகளை அறிமுகம் செய்தல்.<br>• செய்கையாளர்களைப் பாதுகாக்க கூடியதும் உற்பத்தியை மேம்படுத்துவதற்குரியதுமான புதிய வேலைத்திட்டங்களை அறிமுகம் செய்தல்.<br>• தொடர்புபட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ஆராய்ச்சியாளர்கள் விஞ்ஞானிகள் பல்கலைக்கழகம் மற்றும் தனியார் நிறுவனங்களை ஊக்குவித்தல்.<br>• சிறிய மற்றும் நடுத்தரளவிலான இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | மற்றும் உற்பத்தியாளர்கள் சங்கங்களை பலப்படுத்துதல். |
| | | | ***தெங்குச் செய்கை***<br>• தென்னை பயிர்செய்கையில் பூச்சித் தாக்கத்தை ஒழிப்பதற்கு உயிர்த் தொழில்நுட்ப தீர்வை பெறல்.<br>• தேங்காய் பறிக்கும் கருவிகளை உற்பத்தி செய்வதற்கும் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும் உதவிகள் வழங்குதல்.<br>• தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் தனியார் ஆராய்ச்சி நிலையங்களுக்கும் தேவையான வசதிகளை வழங்கல்.<br>• பெருமளவில் தெங்கு செய்கை மேற்கொள்ளப்படாத பிரதேசங்களுக்கு பொருத்தமான தென்னங்கன்றுகளை அறிமுகப்படுத்த தேவையான ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.<br>• தெங்கு நாற்று மேடைகள் அமைப்பதற்கும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தெங்கு செய்கையாளர்களை ஊக்குவித்தல்.<br>• தெங்கு உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் தெங்கு தோட்டங்களில் உப பயிர்களை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.<br>• வீட்டுத் தோட்ட தெங்கு செய்கையை விரிவுப்படுத்த உயர் விளைச்சல் கலப்பினத் தென்னங்கன்றுகளை வழங்குதல் |
| | | | ஏனைய ஏற்றுமதி பயிர்கள்<br>• சிறு ஏற்றுமதிப்பயிர்களின் இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி நிறுத்தப்படும். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
| --- | --- | --- | --- |
| | | | ***கறுவாச் செய்கை***<br>• கறுவா ஏற்றுமதியை விரிவுபடுத்துதல்.<br>• கறுவா ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கு செய்கையாளர்களுக்கு வசதிகள் வழங்குதல்.<br>• கறுவா பட்டை உரித்தல் மற்றும் தயாரிப்பதற்கு தேவையான நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு அவ்வாறான அதியுயர் தொழில்நுட்ப உபகரணங்களின் இறக்குமதித்தீர்வையை நீக்கல்.<br>• அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழுக்கான பாடநெறி (NVQ Level) அறிமுகப்படுத்தல்.<br>• ஐந்து ஏக்கருக்கு குறைந்த சகல கறுவாத் தோட்ட உரிமையாளர்களுக்கும் கறுவா பட்டை உரித்தல் மற்றும் தயாரிப்பு நிலையம் ஒன்றை நிர்மாணித்தல்.<br>• கறுவாவுடன் தொடர்பான பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழிலுக்கான உதவித்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.<br>***மிளகுச் செய்கை***<br>• சிறந்த தரத்துடன் கூடிய உயர் தர மிளகு உற்பத்திக்கு தேவையான தொழில்நுட்ப அறிவினை விவசாயிகளுக்கு வழங்குதல்.<br>• ஏனைய நாடுகளிலிருந்து மீள் ஏற்றுமதி செய்வதற்கு மிளகு இறக்குமதி செய்வதனை கட்டுப்படுத்துவதற்கு மிளகு இறக்குமதிக்கு கூடுதலான தீர்வை விதித்தல்.<br>• மிளகு உற்பத்தியை மேம்படுத்துதற்கு தேவையான கருவிகள் தொழில்நுட்ப ஆலோசனைகள பெறுவதற்கு பயன்பாட்டுக்கான குறைந்த வட்டியில் சலுகை கடன் முறையை முன்னெடுத்தல்.<br>• உள்ளுர்ச் சந்தையில் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட விவசாய ஏற்றுமதிக் கிராமங்கள் அறிமுகப்படுத்தல்.<br>● வெளிநாட்டு சந்தையை அடிப்படையாக கொண்டு கற்றாழை, மஞ்சள், இஞ்சி போன்ற பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கு தேவையான நிதியும் உதவியும் வழங்குதல்.<br>● ஏற்றுமதிப்பயிர் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கத்திற்கு அரச அனுசரணை வழங்குதல். |
| கடற்றொழில் | தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்யும் அதேவேளை உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு மீனுற்பத்தியில் தன்னிறைவு அடைதல் | மக்களுக்கு போசாக்கினை வழங்கல், வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை அதிகரித்தல் மற்றும் தொழில்வாய்ப்பு மற்றும் வாழ்வாதாரங்களை வழங்கல் ஆகியவற்றுக்காக மீன்பிடி அபிவிருத்தித் திட்டத்தினை அறிமுகப்படுத்தல் | ● கரையோர மீன்பிடியை மேம்படுத்துவதற்கு விஞ்ஞான ரீதியான முறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.<br>● களப்பு சுற்றாடல் நிலைமைகளை மேம்படுத்தல்.<br>● தேவை ஏற்படின் தற்போதுள்ள சகல மீனவ துறைமுகங்களையும் நவீன மயப்படுத்தல்.<br>● ஒலுவில் துறைமுகம் பாரியளவான மீன்பிடி படகுகளை நிறுத்தக்கூடிய வகையில் சகல வசதிகளை கொண்ட மீனவத்துறைமுகமாக மாற்றியமைத்தல்.<br>● ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு கடல் நீரை பயன்படுத்தக்கூடிய குளிரூட்டி வசதிகளை செய்து கொடுப்பதுடன் அதற்கு சூரியசக்தியை பயன்படுத்தலை ஊக்குவித்தல்.<br>● சர்வதேச கடல் பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்காக உள்ளூர் கம்பனிகள் இணைவதை விரிவுபடுத்தல்.<br>● பாரியளவிலான ஆழ்கடல் மீன்பிடி படகுகளைத் தயாரிப்பதற்கும் பராமரிப்பதற்கும் திருகோணமலை துறைமுகத்தை அண்டிய வலயம் ஒன்றை ஏற்படுத்தல்<br>● இலங்கையில் சகல மீன்பிடித் துறைமுகங்கள், இறங்குதுறைகள் மீன்கள் எடுத்து வரும் இடங்கள் நவீன தொழில்நுட்ப வசதிகள் குளிரூட்டி வசதிகள் எரிபொருள் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | விநியோகம் மற்றும் சுகாதார வசதிகள் அடங்கிய நிலையமாக மாற்றியமைத்தல்.<br>• புத்தாக்கத்தின் மூலம் பெறுமதிச் சங்கிலி ஊடாக மீன்பிடித்தரத்தை நீண்ட காலம் வைத்திருக்கும் முறைகளைமேம்படுத்துவதற்கு வட்டியில்லா கடன் திட்டத்தினை அறிமுகம் செய்தல்<br>• உள்நாட்டு மற்றும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு குறைந்த வட்டிக்கடன் சலுகை, வரிச் சலுகைகள், காப்புறுதி, தொழில்நுட்ப ஆலோசனை சந்தை இணைப்புவசதிகள் ஆகியன வழங்கல்.<br>• கடற்றொழிலில் ஈடுபடும் பெண்களை மையமாக கொண்ட மீன்பிடியுடன் தொடர்புடைய குடிசைக் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்தல்.<br>• தகரத்திலடைக்கப்பட்ட மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் தனியார் கம்பனிகளுக்கும் தொழில் முயற்சியாண்மைகளுக்கும் வசதிகளை வழங்கல்.<br>• வடக்கு கிழக்குப் பகுதிகளில் சட்ட விரோத மீன்பிடியை நிறுத்துவதற்கு இலங்கை கடற்படை கரையோர பாதுகாப்புபடையை பலப்படுத்துவதற்கு இந்திய அரசாங்கத்துடன் கூட்டு பிணக்கு தீர்க்கும் திட்டத்தை முன்னெடுத்தல்.<br>• கடல் நீர் மற்றும் நன்னீர் மீன்பிடிகளை உற்பத்தி செய்ய வணிக ரீதியில் விரிவுப்படுத்தவும் மீனவ சங்கங்கள் மீன்பிடி மற்றும் கடல்வாழ் உயிரின அபிவிருத்தி அதிகாரசபை கூட்டாக விரிவுபடுத்தல்.<br>• மீனவ சமூகத்திற்காக மிக பயனுள்ள காப்புறுதி முறை அறிமுகப்படுத்தல். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | • மீனவ இளைஞர்களை உற்பத்தியாளாராக மாற்றியமைப்பதற்கு நவீன தொழில்நுட்ப முறை பயன்பாடு கடற்றொழில் தொடர்பான உயர் தொழில் மற்றும் கல்வி அறிவை வழங்கும் வேலைத்திட்டம் கடல்சார் பல்கலைக்கழகம் ஊடாக முன்னெடுத்தல்.<br>• நாட்டில் உற்பத்தியாளார்களுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்கும் விதத்தில் மீன் உற்பத்தியை அதிகரித்து அதனை கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதற்கு விரிவான வகையில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தையும் மீனவ சமூக அமைப்புக்களையும் பயன்படுத்தல். |
| கால்நடை | உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உள்நாட்டு திரவப்பால் உற்பத்தியை அதிகரித்தல். | | ***பால் உற்பத்தி***<br>• நாட்டின் பல பாகங்களுக்கும் பொருந்தக்கூடிய பசு மாடுகளை அறிமுகம் செய்ய தேவையான ஆய்வுளை ஊக்குவித்தல்.<br>• குறைந்த பகுதியில் கூடுதலான மாடுகளை வளர்ப்பதற்கும் "மாட்டு பட்டி முறை" அறிமுகப்படுத்தல்.<br>• வட மாகாணத்தில் பால் உற்பத்தி செயற்பாட்டை ஊக்குவித்தல்.<br>• பாலின் தரத்தை அடிப்படையாகக் கொண்ட விலைகள் அறிமுகப்படுத்தல்.<br>• சிறந்த தரத்துடன் கூடிய புந்தரைகளை உருவாக்க தேவையான வசதிகள் தேசிய கால்நடைவள சபை ஊடாக வழங்குதல்.<br>• கால்நடைகளுக்கான சிறந்த உணவக்கான தீர்வையைக் குறைத்தல்.<br>• பாரியளவிலும் நடுத்தரளவிலும் பாற்பண்ணைகளைஏற்படுத்துவதற்கு முன்வரும் உள்ளூர் தனியார்உற்பத்தியாளர்களுக்கு தேவையான காணியும் முதலீட்டு |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | வசதிகளையும் செய்து கொடுத்தல்.<br>• பால் சேகரிப்பு களஞ்சியப்படுத்தல் மற்றும் களஞ்சியப் படுத்தும் நிலையங்களை அதிகரிப்பதற்கும் சூரிய சக்தியில் செயல்படும் சிறியளவிலான குளிரூட்டும் தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்தல்.<br>• முறையான வகையிலும் உரிய அளவிலும் பாலைகறந்தெடுப்பதற்கும் கருவிகள் மூலம் பாலை கறந்தெடுக்கும் உபகரணங்களை பால் உற்பத்தியாளர்களுக்கும் விவசாய கூட்டுறவு சங்கங்களுக்கும் சலுகை கட்டண அடிப்படையில்வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| | | | ***ஏற்றுமதிக்கான இறைச்சி மற்றும் முட்டை***<br>• கோழி இறைச்சி, முட்டை உற்பத்தியை விரிவுப்படுத்துதற்கு பாரியளவிலான உற்பத்தியாளர்களை ஏற்றுமதி செய்வதற்கு ஊக்குவித்தல்.<br>• சிறிய மற்றும் நடுத்தரளவிலான உற்பத்திகளை ஊக்குவித்து உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துதல்.<br>• விலங்கு பண்ணைகள் உற்பத்தி கைத்தொழில் ஆகியவற்றுக்கு சர்வதேச தரம் அறிமுகப்படுத்தல்.<br>• குடிசைக் கைத்தொழிலாக மருந்திடாத இறைச்சி உற்பத்தியினை ஆரம்பிப்பதற்கு நிதி மற்றும் தொழில்நுட்ப வசதி வழங்குதல். |
| வியாபாரம் / தொழில் முயற்சி அபிவிருத்தி | உள்நாட்டுக் கைத்தொழிலைக் கட்டி யெழுப்புவதற்கு வர்த்தக சமூகத்தினருக்கு உகந்த வர்த்தக சூழலை ஏற்படுத்தல் | தொழில் முயற்சியாண்மை அபிவிருத்திக்கு வசதியளித்தல்<br><br>உள்நாட்டு தொழில் முயற்சியாண்மையாளரை பாதுகாத்து வலுப்படுத்தல் | • கடனை மீள் செலுத்தும் வகையில், அதற்கான கால எல்லையை நீடிப்பதற்கு உரிய முறைமையொன்றை உருவாக்குவதற்கு வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தல்.<br>• மீண்டும் வங்கிக் கடனைப் பெறுவதற்கு தடையாகவுள்ள தடுப்புப்பட்டியலில் (CRIB) உள்ளவர்களை குறுகிய காலப் பகுதிக்காகவேனும் அந்த பட்டியலிருந்து நீக்குவதற்காக |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | பெறுமதி அதிகரிப்பை ஊக்குவித்தல் | மத்திய வங்கிக்கு ஆலோசனை வழங்கல்.<br>• வீழ்ச்சியடைந்துள்ள வர்த்தகத் துறையை கட்டியெழுப்புவதற்கு தேவையான நிதிக்கொள்கையினை நிவாரண வட்டி நடைமுறையின் கீழ் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தல்<br>• ஏற்றுமதி தொடர்பான உற்பத்தி நடவடிக்கைகளை வலுவூட்டுவதற்காக பொருளாதார அரங்கு மற்றும் கொழும்பு, ஹம்பாந்தோட்டை கடற்படை, விமான மத்திய நிலையங்களை கேந்திரமாகக் கொண்டு சகல மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தொழில் பேட்டை, சுதந்திர வர்த்தக வலயம்,10 சுதந்திர துறைமுகங்களை அமைத்தல்.<br>• சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் தொழில் பேட்டைகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் உரிய வகையிலும் இலகுவாகவும்<br>• மேற்கொள்ளக்கூடிய, தேவையற்ற விடயங்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கும் தெளிவான சட்டதிட்டங்களை பாராளுமன்ற சட்டத்தில் நிறைவேற்றல்.<br>• ஏற்றுமதி நடவடிக்கைகளை தங்கு தடையில்லாமலும் கால விரயத்தைத் தடுக்கும் வகையிலும் வினைத்திறனான சேவையை முன்னெடுக்க “தனியான ஒன்றிணைக்கப்பட்ட பொறிமுறை” ஸ்தாபித்தல்.<br>• சர்வதேச வர்த்தக ஜாம்பவான்களின் (International Business Giants) வர்த்தக நிறுவனங்களின் வியாபார நிறுவனங்களின் பிரதான அலுவலகங்களை கொழும்பு மற்றும் துறைமுக நகரங்களை அண்டியப் பகுதிகளில் ஸ்தாபித்தல்.<br>• வெளிநாட்டு தனியார் முதலீடுகளை நாட்டிற்குக் கொண்டு வருவதற்காக முதலீட்டாளரைக் கவர்வதற்காக தனியார்த்துறையினரின் ஒத்துழைப்புடன் புதியபொருளாதாரத் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | திட்டத்தை மேம்படுத்துவதற்காக சர்வதேச பிரசார வேலைத்திட்டங்கள் முன்னெடுத்தல்.<br>• தற்போது இனங்காணப்பட்டுள்ள கனிய வளங்களை (கனிய மணல், டொலமைட், பொசுப்பேற்று, மாணிக்கக்கல்) மூலப் பொருள் வடிவத்தில் ஏற்றுமதி செய்வதை மட்டுப்படுத்தல்.<br>• மேற்படி கனிய வளங்களை ஏற்றுமதி செய்வதற்கு முன் பெறுமதி சேர்க்கப்படுவதன் ஊடாக உயரிய விலையைப் பெற்றுக் கொள்வதற்காக வேலைத்திட்டங்களை மேம்படுத்தல்.<br>• நவீன உயர் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி ஆபரணக் கைத்தொழிலில் கற்கள் பதிக்கப்பட்ட ஆபரணத் தயாரிப்புக்கள் ஏற்றுமதி செய்தலை ஊக்குவிப்பதற்காக வரியை இல்லாமற் செய்தல்.<br>• தற்போது நிலத்துக்கு அடியிலுள்ள மற்றும் கடலுக்கு அடியில் அறியப்பட்ட கனிய வளங்களை அதி நவீன தொழினுட்பத்தை பயன்படுத்தி ஆராய்வதற்கு ஆரம்பித்தல்.<br>• பாரியளவிலான வியாபாரத்திற்கான உயர் தொழில்நுட்ப தயாரிப்புகள் உற்பத்திகளை புதிதாக ஆரம்பிப்பதற்கு தேவையான சகல வசதிகளையும் வழங்கல்.<br>• தேசிய வர்த்தகர்களை பாதுகாத்து அவர்களை பலப்படுத்த விசேட அவதானம் செலுத்தல்.<br>• தேசிய வர்த்கர்களுக்கு இலகுவாக முன்னெடுக்கக் கூடிய வர்த்தக துறைகளுக்கு வெளிநாட்டினருக்கு வழங்கும் அனுமதியை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.<br>• புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு தேவையான நீண்ட கால குத்தகை கீழான இடம், கடன் வசதிகள், வர்த்தக ஆலோசனைகள், தொழில் நுட்பம் மற்றும் அடிப்படை வசதிகள் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | உள்ளிட்ட சகலவற்றையும் வழங்கும் விசேட வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்.<br>• பாடசாலை மட்டத்தில் இருந்து தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல். |
| சுற்றுலா | மக்களின் பங்கேற்புடனான சுற்றாடல் மற்றும் உள்நாட்டு கலாசார நேயக் கைத்தொழிலினை மேம்படுத்தல் | வருடாந்த சுற்றுலாப்பயணிகளின் வருகையை 7 மில்லியனாக அதிகரிக்கும் நோக்கில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல் | • வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளுக்காக நாட்டின் புதிதாகக் கவரக் கூடியவற்றை இனங்காணல்.<br>• சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்கு வர்த்தக மாநாடுகள், உற்சவங்கள், கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றை நடத்துவதற்கு வசதியளித்தல்.<br>• சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்குரிய முதலீடு மற்றும் ஏனைய வசதிகளை தனியார் துறைக்கு வழங்கல்.<br>• மிகவும் வினைத்திறனான குடிவரவு மற்றும் குடியகல்வு செயற்பாட்டினை அறிமுகப்படுத்தல்.<br>• உள்ளூர் விமான நிலையங்களை நவீனமயப்படுத்தல்.<br>• சுற்றுலா நகரங்களில் பிரதான மத்திய நிலையங்களை ஆரம்பித்தல்.<br>• சுற்றுலாத் துறையினருக்குத் தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டினை ஒழுங்கமைத்தல்.<br>• சுற்றுலா பயிற்சிப் பாடசாலைகள் பிரதானசுற்றுலா நகரங்களில் அமைத்தல்.<br>• இணையத் தளத்தினூடாக சுற்றுலா விடுதிப்பதிவுகள் போக்குவரத்து வசதிகள், சுற்றுலா வழிகாட்டிகள், உள்ளக விமான சீட்டுகள் மற்றும் உள்நுழையும் நுழைவுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ள கூடிய வகையில் ஒற்றை முன்பதிவு மென்பொருள் அமைப்பு (Single Booking Software System) மற்றும் சகல சுற்றுலா இடங்களுக்குமான இலத்திரனியல் கேட்ஸ் முறை |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | (ElectronicGates System) அறிமுகப்படுத்தல்.<br>• சேவை வழங்குனர்களின் எண்ணிக்கையினை ஒரு மில்லியனாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.<br>• சுற்றுலாத் தொழிற்றுறையை மேம்படுத்த உலகின் பல்வேறு நாடுகளில் விரிவான பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய வழிமுறைகளில் பிரசாரங்களை முன்னெடுத்தல்.<br>• தற்போது சுற்றுலா விடுதிகளிலுள்ள அறைகளின் எண்ணிக்கையை இரு மடங்காக்கப்படுவதுடன் மிகவும் உயர்ந்த தரத்துடன் சுற்றுலா விடுதிகளை நிர்மாணிப்பதற்கு தேவையான சகல வசதிகளும் குறைவில்லாமல் வழங்குதல்.<br>• சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்கு உள்ளூர்த் துறையினருக்கு ஏற்ற சூழலை முன்னெடுத்தல்.<br>• சுற்றுலாத்துறையில் பணிபுரிவர்களுக்கான தொழில் சட்டங்களை மீளமைத்தல்.<br>• உள்நாட்டு மற்றும் சமூகம் சார்ந்த சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டங்களை ஏற்படுத்தல்.<br>• சுற்றுலாத் துறையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சகல சுற்றுலா வழிகாட்டி, சுற்றுலா சாரதிகளை பதிவு செய்து அவர்களுக்குத் தேவையான சர்வசேத பயிற்சிகளும் அதற்கான சான்றிதழ்களை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளல்.<br>• சுற்றுலா நகரை அண்மித்து சுற்றுலா பொலிஸ் சேவையை மேம்படுத்தல். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| ஆடைக் கைத்தொழில் | ஏற்றுமதி வருமானத்தினை அதிகரித்தல், மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களித்தல், தொழில் மற்றும் பிரதேச அபிவிருத்தி | மேலதிக அபிவிருத்திக்கு வசதியளித்தல்<br><br>துறைக்கான வரியினை மீளஅமைத்தல் | • முதலீட்டுச்சபையும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவும் இணைந்து திட்டமிடப்பட்டுள்ள ஏறாவூர் பிரதேசத்துக்குள் அமைப்பதற்கான ஆடைத் தொழிற்சாலையை அமைத்தல்<br>• அடிப்படை வசதிகளை வழங்கும் சுதந்திர வர்த்தக வலயத்தை வடமாகாணத்தில் ஆரம்பித்தல்.<br>• ஆடைத்தொழிற்துறை அதுபோன்ற அந்நிய செலாவணியை பெற்றுத் தரும் தொழிற்றுறைக்காக விதிக்கப்பட்டுள்ள நியாயமற்ற வரியை ஆராய்ந்து திருத்தங்கள் கொண்டு வருதல். |
| நிர்மாணக் கைத்தொழில் | இலங்கைக்கு ஏற்புடையதான சூழல் நேயமிக்க நிர்மாணக் கைத்தொழிலை வெளிநாடுகளுக்கு விரிவாக்குவதற்கான பின்னணியைத் தயாரித்தல் | விரைவாக அனுமதியளிக்கும் செயற்பாடொன்றிற்கு வசதியளித்தல்<br><br>உள்நாட்டு சிறு மற்றும் நடுத்தர உப ஒப்பந்த நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்<br><br>தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்குரிய தொழில்நுட்ப உதவிகளை அளித்தல் | • தேவையான சகல அனுமதிகளையும்ஒரே இடத்தில் அல்லது இணையத் தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு முறைமை ஒன்றை உருவாக்கல்.<br>• சகல கட்டடங்களையும் நிர்மாணிப்பதற்குரிய அனுமதிகளை பெற்றுக்கொள்வதற்கான காலத்தை 3 வாரங்களாகக் குறைத்தல்.<br>• சகல நகர நிர்மாண உடன்படிக்கைகளையும் ஒரே இடத்தில் உள்ளவாறான கட்டமைப்பை உருவாக்கி நகர அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்தல்.<br>• சகல நகர நிர்மாணிப்புகளின் போது வாகன தரிப்பிடப் பிரிவு அமைப்பதைக் கட்டாயமாக்கல்.<br>• நிதி நெருக்கடியை தீர்ப்பதற்காக தற்போது வழங்கப்படும் கடன் வழங்கலுக்கான நிவாரண காலங்களை அறிவித்தல்.<br>• 2014ஆம் ஆண்டு காணப்பட்ட வரி அறவீட்டு முறை மீண்டும் அறிமுகப்படுத்தல் மற்றும் தொடர் மாடிவீடுகளுக்கு அறிவிடப்படும் 15 சதவீதபெறுமதி சேர் வரியை நீக்கல்.<br>• அரசாங்கத்தின் நிர்மாணப் பணிகள் அனைத்தைம் உள்ளூர் கட்டுமான நிறுவனங்களுக்கு ஒதுக்கல். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| | | | • செயற்பாடுகளில் நிர்மாணத்துறையினர் மற்றும் நிறுவனங்கள் முகங்கொடுக்கும் கஸ்டங்களை குறைப்பதற்காக புதிய வங்கி முறைமை மத்திய வங்கியின் ஊடாக அறிமுகப்படுத்தல்.<br>• நிர்மாணத் தொழிற்றுறையினருக்கு தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் முறையினை மறுசீரமைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.<br>• பல்வேறு துறைகளுக்குத் தேவையான பயிற்சியுடன் கூடிய தொழில்நுட்ப தரங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்குரிய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.<br>• நிரம்ாணத்துறைக்குத் தேவையான ஆலோசனை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் உயர் தொழில்நுட்பவியலாளர்களைக் கொண்ட ஆலோசனை சபை அமைத்தல்.<br>• இலங்கையில் நிர்மாணத் துறையினை சா்வதேச ரீதியில் பிரபல்யமாக்குவதற்கு தேவையான நிர்மாணத்திட்டங்களை அமைப்பதற்காக வீடமைப்பு நிர்மாண கலைஞர்களின் நிறுவனத்துடனும் பல்கலைக்கழகம் மற்றும் வேறு நிறுவனங்களுடன் இலகுவாக செயற்படக் கூடிய பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தல்.<br>• பிரதான நிர்மாணத்துறை நிறுவனத்துடன் செயற்படும் உப ஒப்பந்தக்காரர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கான சட்டக்கோவை நிறைவேற்றப்பட்டு, உள்நாட்டு, சிறிய மற்றும் மத்தியதர உப ஒப்பந்தக்காரர்களை பாதுகாப்பதற்கு திட்டம் வகுத்தல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
| --- | --- | --- | --- |
| சீனிக் கைத்தொழில் | உள்ளூர்த் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய சீனியை உற்பத்தி செய்தல் | சீனிக்கைத்தொழிலுக்கு வசதியளித்தலும் ஊக்குவித்தலும் | • சீனி உற்பத்திக்குத் தேவையான கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நிலப்பரப்பை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுத்தல்.<br>• கந்தளாய் மற்றும் ஏனைய தொழிற்சாலைகளையும் மீள ஆரம்பித்தல்.<br>• புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு தனியார் துறையினருக்கு சலுகைகளை வழங்கல்.<br>• கரும்புப் பயிர்ச் செய்கை நிறுவனங்களின் தேவைகளான நீர், தொழில்நுட்ப அறிவு மற்றும் நிதி வழங்கல் |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் கள் | பெறுமதி சேர்க்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிற்றுறையில் இரட்டைத்தன்மையை இல்லாமற் செய்தல்<br><br>மூலப் பொருட்களின் பற்றாக்குறையை எளிதாக்குதல் | • ஒரே நிறுவனத்தின் கீழ் தேவைகளைநிறைவேற்றிக் கொள்வதற்கான முறையை மேம்படுத்தல்.<br>• பெறுமதியை அதிகரிக்கக் கூடிய செயற்பாடுகளை முன்னெடுப்பவர்களுக்கு தேவையான ஊக்குவிப்புகள் வழங்குதல்.<br>• தச்சுத் தொழிற்றுறை, பிரம்புத் தொழிற்றுறை மற்றும் அதனுடன் சேர்ந்த தொழிற்றுறைகளின் மூலப்பொருட்களுக்கு காணப்படும் பிரச்சினைக்கு தீர்வாக உற்பத்தி கூட்டுறவு முறையின் கீழ் பாவனைக்குட்படுத்தப்படாத அரச நிலங்களை குத்தகைக்கு விடல்.<br>• மரம் மற்றும் தளபாட உற்பத்தியாளர்கள் முகங் கொடுக்கும் மூலப்பொருள் பெற்றுக்கொள்வதற்காக பிரச்சினைக்கு தீர்வாக தீர்வையற்ற பட்டையுடன் கூடிய மர இறக்குமதிக்கு அனுமதியளித்தல். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | செயற்பாடுகள் |
|---|---|---|---|
| கூட்டுறவு இயக்கம் | கிராமத்தின் பொருளாதார தேவைகளை வழங்கும் அதேவேளை உற்பத்திச் செயற்பாட்டில் முக்கிய வகிபங்கினை ஆற்றுவதற்கு ஒரு பலமான உள்நாட்டு கூட்டுறவு இயக்கத்தை கட்டியெழுப்புதல் | உற்பத்திக் கூட்டுறவுகளின் ஒரு அபிவிருத்தியும் விரிவாக்கமும் அடைந்ததான அமைப்பு<br><br>இளைஞர்களையும் பெண் பங்கேற்பினையும் ஈடுபடுத்துதல்<br><br>அரசியலாக்கப்பட்ட கூட்டுறவுகள் | • விவசாயத் தொழிற்றுறை, பால் உற்பத்தி, மீன்பிடித் துறை, சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கைப் போன்ற பல்வேறு துறைகளை விரிவாக்கி பலப்படுத்தி உற்பத்திக் கூட்டுறவு முறைமையை உருவாக்கல்.<br>• பாரம்பரிய தொழிற்றுறையை அண்மித்த உற்பத்திகளுக்கான மூலப்பொருள் சந்தையினை அறிமுகப்படுத்துவதற்கான பொறுப்பினை இவ்உற்பத்தி கூட்டுறவிடம் அளித்தல்.<br>• உற்பத்தி கூட்டுறவு முறை ஊடாக இளைஞர் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு பெறுமதியை சேர்த்து வியாபார அபிவிருத்திக்காக ஊக்குவித்தல்.<br>• சகல கூட்டுறவு சங்கங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு “கூட்டுறவு அபிவிருத்தி வங்கிகளை” ஸ்தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.<br>• நாட்டில் உள்ள கூட்டுறவு விற்பனை நிலையங்களை முழுமையாக நவீன மயப்படுத்தல்.<br>• நவீன கணனி வசதிகளுடன் கூட்டுறவுகளை உபகரணப்படுத்தல்.<br>• கூட்டுறவு பணியாளர்களின் சம்பள முறைமையை சீர்திருத்தத்திற்குட்படுத்தி சம்பள உயர்வை மேற்கொள்ளல்.<br>• மாகாண சபைகளின் இணக்கத்துடன் கூட்டுறவுச் சட்டங்களில் திருத்தம் மேற்கொண்டு வியாபார நடவடிக்கைகளுக்கு தேவையான சுதந்திரத்தை வழங்கல். |

# அத்தியாயம் - 06

## தொழில்நுட்பத்தை மையப்படுத்திய சமூகம்

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| **தொழினுட்பமும் புத்தாக்கமும்** | தொழில்நுட்ப பயன்பாடுடைய சமூகம் (Smart Nation) | இலங்கையை சர்வதேச புத்தாக்க கேந்திர நிலையமாக்கல் | பின்வருவனவற்றில் தொழினுட்ப புத்தாக்கங்களின் பயன்பாட்டினை அதிகரித்தல்:<br>• விடயங்களின் இணையம்;(IoT) செயற்கை நுண்ணறிவு(AI),<br>• உயிரியல் தொழினுட்பம்(BioTechnology), இயந்திர தொழினுட்பம்(Robotics),<br>• ஒக்மென்டட்ரியாலிட்டி(Augmented Reality), கிளவுட் கொம்பியுட்டிங்( Cloud<br>• Computing),<br>• நனோ தொழில்நுட்பம்(Nano-technology) முப்பரிமாண அச்சிடல் (3D Printing) |
| | | மக்கள் மையப்படுத்திய எண்ணிம நிருவாகமுறை | • புதிய தொழினுட்ப முறை ஊடாக ஒன்பது மாகாணங்களிலும் மக்கள் சேவை நிலையங்களை (Citizen service center) உருவாக்கி திறன்மிக்க, விரைவான சேவைகளை (தேசியஅடையாள அட்டை, கடவுச் சீட்டு, பிறப்பு, இறப்புச் சான்றிதழ் போன்றன) வழங்கல்<br>• எண்ணிம மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவு முறையை (Digital & Electronic payment system)போக்குவரத்து குற்றங்கள் தொடர்பிலான குற்றத் தொகையை செலுத்துவதற்கு அறிமுகப்படுத்தல்<br>• ஊழல், இலஞ்சத்தை இல்லாமலாக்குவதற்கு ஈ-கொள்வனவு (e-procurement) முறைமையை அறிமுகப்படுத்தல் |
| | | எண்ணிம மயப்படுத்தப்பட்ட இலங்கை | • தரவுப் பரிமாறலுக்கு நாடு தழுவிய அதிவேக ஒளியியல் தரவு பரிமாற்ற அமைப்பு (High Speed Optical Transmission System) மற்றும் அதிவேக 5வது தலைமுறை அகன்றகற்றை (5G Mobile Broadband) முறைமையை உருவாக்குதல்<br>• எண்ணிம நிர்வாக மற்றும் கண்காணிப்புடன் கூடிய எண்ணிம நகரங்களை (Digital Cities) உருவாக்கல்<br>• அனைத்து நிதி கொடுக்கல் வாங்கல்களுக்காக அலைபேசி மற்றும் எண்ணிம |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | கொடுப்பனவு (Mobile and Digital Payment System) முறைமையை அறிமுகப்படுத்தல்<br>• எல்லைதாண்டிய ஈ-வர்த்தகம்மற்றும் சர்வதேச ஈ-கொடுப்பனவு (Cross border e-Commerce and International e-Payment) முறைமையை முன்னெடுத்தல்<br>• தரவு பாதுகாப்பு (Data Protection) சைபர் பாதுகாப்பு (CyberSecurity) மற்றும் அறிவுசார் சொத்து(Intellectual Property) என்பவற்றுக்குத் தேவையான புதிய சட்டத்திட்டங்களை உருவாக்குதல் |
| | | தகவல் தொழினுட்ப தொழில் முயற்சியாண்மை (IT Entrepreneureship) | • 2025ஆம்ஆண்டளவில் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி பெறுமதியான சேவைகளாக வியாபார செயன்முறை வெளிச்சேவை (BPO - Business Process Outsourcing) மற்றும் அறிவு செயன்முறை வெளிச்சேவை (KPO - Knowledge Process Outsourcing)போன்றவற்றை மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.<br>• தகவல் தொழில்நுட்ப மற்றும் வியாபார செயன்முறை வெளிச்சேவை நிலையங்களை உப-நகரங்களை அண்மித்து உருவாக்குதல்<br>• 2025ஆம்ஆண்டளவில் மென்பொருள் பொறியியலாளர்களின் எண்ணிக்கையை மூன்று லட்சமாக அதிகரித்தல்<br>• மென்பொருட்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக அவற்றை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கு உள்நாட்டு மென்பொருள் பொறியியலாளர்களுக்கும் வடிவமைப்பாளர்களுக்கும் தேவையான அனுசரணை வழங்கல்<br>• சர்வதேச சந்தைக்கு ஏற்றதாக மென்பொருளை உருவாக்க உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களுக்கு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தல் |

# அத்தியாயம் - 07

# பௌதீக அமைப்பின் புதிய அணுகுமுறை

சமூகத்தின் அனைத்து பிரிவினருக்குமிடையில் சமத்துவமான சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுத்து கிராமிய நகர இடைவெளியை குறைத்தல்.

- ஒருங்கிணைந்த பௌதீக இடம் சார்ந்த முறைமையினூடாக நகர மயமாக்கலில் காணப்படும் வேறுபாடுகளை நீக்குதல்.
- பிரதான நகரங்கள், நகரங்கள் மற்றும் வர்த்தக வலயங்களை ஒருங்கிணைத்து விவசாய கைத்தொழில் மயமாக்களை ஊக்குவிப்பதனூடாக பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி செயல்முறையை உறுதிப்படுத்தி சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல்.
- பிரதான இரண்டு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை தொடர்புபடுத்தியதாக அனைத்து வர்த்தக வலயங்களையும் தொடர்புபடுத்தி ஏ9 உடன் சி9 பொருளாதார தாழ்வாரத்தினை உருவாக்குதல்.
- செயற்றிரனான மற்றும் சுற்றாடல் நட்புறவு ரீதியான பொதுப் போக்குவரத்துக்காக போக்குவரத்து வலையமைப்பை அபிவிருத்தி செய்தல்.
- சர்வதேச துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை வர்த்தக மற்றும் பயணிகள் இறங்குதுறைகளாக மாற்றியமைத்தல்.
- குறைந்த கிரயத்திலான எரிபொருள்களின் கிடைப்பனவை அதிகரித்தல்.
- நாட்டின் அனைத்து மக்களுக்கும் தூய்மையான மற்றும் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை உறுதிப்படுததும் அதேவேளை குழாய்நீர் கிடைப்பனவினை அதிகரித்தல்.
- அனர்த்தங்களினால் ஏற்படும் உயிரிழப்பு, சொத்துக்களுக்கான அழிவு மற்றும் பொருளாதார சேதங்களை குறைப்பதற்காக சிறப்பான முன்னறிவித்தல் முறைமையினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| நகர மறுசீரமைப்பு | நகரமயமாக்கலில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல் மற்றும் நகர கட்டமைப்புக்களை சீர்செய்வதற்கு பௌதீக இடம் சார்ந்த முறைமையினை ஒருங்கிணைத்தல். | நகரங்களின் அமைவிடம் பழைமைத்துவம் சமூக மற்றும் பொருளாதார பெறுமதிகள் மற்றும் தொடர்புகளின் அடிப்படையில் பல்வேறு மட்டத்திலான நகரங்களை உருவாக்கி அவற்றை முன்மொழியப்பட்டுள்ள சீ வலயத்துடன் இணைத்து நகரமயமாக்கலில் காணப்படும் பிரச்சினைகளை தீர்த்தல் | • கொழும்பு, ஹம்பாந்தோட்டடை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய நான்கு பெரிய வணிக நகரங்களை அபிவிருத்தி செய்து சர்வதேச மையங்களுடன் இணைத்தல்.<br>• கண்டி, அநுராதபுரம், கம்பஹா, இரத்தினபுரி, காலி, பதுளை, மன்னார், மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய நகரங்கள், அந்த நகரங்களின் பொருளாதார மற்றும் சமூக பெருமதி சீ வலயத்துடன் தொடர்புபடும் போது உருவாகும் பெறுமதியை ஆராய்ந்து தேசிய நகர எண்ணகருவிற்கு அமைய அபிவிருத்திச் செய்யப்படும்.<br>• புத்தளம், நீர்கொழும்பு, பொத்துவில், தம்புள்ளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் புத்தல ஆகிய நகரங்கள் நான்கு பெரிய வணிக நகரங்கள், தேசிய நகர மற்றும் சீ வலயத்துடன் தொடர்புபட்ட நகரங்களாக அபிவிருத்தி செய்யப்படும்.. |
| | | தகவல் தொழில்நுட்ப ஆய்வு, சுற்றுலா மற்றும் சேவை வழங்குநர் ஆகிய ஒவ்வொரு துறைக்கும் முக்கியத்துவம் வழங்கக்கூடிய நகர கட்டமைப்புக்கான சூழலை உருவாக்குதல். | • தகவல் தொழில்நுட்ப ஆய்வு, சுற்றுலா மற்றும் சேவை வழங்குநர் சேவைகளுடன் கூடிய கொத்தணி நகரம் (Cluster City) உருவாக்குதல் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| புதிய கொழும்பு "வர்த்தக மற்றும் நிதி மையம்" | 21ஆம் நூற்றாண்டின் "புதிய கொழும்பு" | கொழும்பினை சர்வதேச வியாபாரம் வர்த்தகம், நிதி மற்றும் வங்கித்துறையின் மையமாக மாற்றுதல். | • கொழும்பினை சர்வதேச நிதி மற்றும் வர்த்தக மையமாக மாற்றுவதற்கு அவசியமான சட்ட மற்றும் நிதியியல் சீராக்கங்களை அறிமுகம் செய்தல். |
| | | பயணிகள் போக்குவரத்தில் காணப்படும் நெரிசலினை குறைக்கும் முகமாக நவீன துரித போக்குவரத்து முறைமை அபிவிருத்தி செய்யப்படும். | • துறைமுக நகரம் மற்றும் கொழும்பு நகரத்தை அண்மித்த உப நகரங்களை இணைத்து நகர புகையிரத முறைமை அபிவிருத்தி செய்யப்படும்<br>• கொழும்பு நகர போக்குவரத்து நெரிசலை குறைக்குமுகமாக இலகு ரயில் கட்டமைப்பு உருவாக்கப்படும்.<br>• கொழும்பு நகரத்தை அண்மித்து அதிக வாகன நெரிசலை 50 வீதமாக குறைப்பதற்கு ஒருவழி பாதை சுற்றுவட்ட வீதி (One way round-about) கட்டமைப்பு திட்டத்தை அமுல்படுத்துவதுடன் பிரதான முச்சந்திகளில் ஏற்படும் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக நுழைவு பாதைகளில் சிறிய மேம்பாலங்கள் கட்டமைப்பை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| | | கொழும்பினை அழகுபடுத்தல் | • வீதிகளின் இருமருங்குகளிலும் அழகான நகர பூங்காக்கள் நீர் பூங்காக்கள் மற்றும் பசுமை ஒழுங்குகள் அறிமுகம் செய்யப்படும்.<br>• நகர கழிவுகளை சேகரித்தல் மற்றும் சாக்கடைகளை முகாமை செய்வதற்கு விசேட வேலைத்திட்டகள் அமுல்படுத்தப்படும். |
| தரைப்போக்குவரத்து | பொதுமக்களுக்கு சொகுசான, வினைத்திறனான மற்றும் சுற்றாடல் நட்பான போக்குவரத்து | வீதி வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல். | • பொருளாதார தாழ்வாரங்களை இணைத்து வீதி கட்டமைப்பின் மிகுதியான பகுதிகளை புனரமைத்தல்<br>• கொழும்பு கண்டி, துறைமுக நுழைவு வீதி, வடக்கு, இரத்தினபுரி அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் புதிய களனிப் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | வசதியினை பெற்றுக்கொடுக்கும் முகமாக வீதி மற்றும் புகையிரத உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகளை ஏற்படுத்துவதற்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும். | | பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையிலான அதிவேக பாதை என்பன கால தாமதமின்றி நிர்மாணிக்கப்படும்.<br>• கண்டி மற்றும் நுவரெலியாவுக்கிடையில் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையினை நிர்மாணிப்பதற்கான சாத்திய வளங்கள் மேற்கொள்ளப்படும்.<br>• அனைத்து பிரதான நெடுஞ்சாலைகளிலும் 3-5 கி.மீ. இடைவெளியில் முந்திச் செல்லும் ஒழுங்கையினை உருவாக்கி வாகன நெரிசலை குறைத்தல்.<br>• கிராமிய வீதிகளை முழுமையாக நவீனமயப்படுத்தல்.<br>• பிரதான வீதி மற்றும் அதிவேக வீதிகளில் வாகன நெரிசல் இல்லாமல் உள்நுழையக்கூடிய உள்வீதிகள் ஒரு லட்சம் கிலோ மீற்றர் தூரத்தை அபிவிருத்தி செய்து உள்வீதிக்கு இலகுவாக நுழையக் கூடிய வீதி கட்டமைப்புகளை உருவாக்குதல் |
| | | வீதிப் போக்குவரத்து அபிவிருத்தி | • பொது சேவையாக லாபமின்றி நடத்திச் செல்லப்படும் மத்திய போக்குவரத்து சபையை தற்காலத்திற்கு ஏற்றவாறு நவீனமயப்படுத்தல்<br>• அதன் பராமரிப்பு மற்றும் சேவையாளர்களின் நலனுக்காக வருமானம் டிப்போக்கள் மற்றும் வணிக பெறுமதி மிக்க இடங்களை பயன்படுத்தி பிரதேச வணிக மத்திய நிலையம் மற்றும் சேவை வழங்கும் மத்திய நிலையங்களை அமைத்தல்.<br>• கொழும்பு நகரில் இருந்து சகல நகரங்களுக்கும் தொடர்பு படக்கூடிய வகையில் அதி சொகுசு பஸ்சேவைகளை அறிமுகப்படுத்துவதுடன்,<br>• அன்றாட அலுவலக போக்குவரத்தில் ஏற்படும் கஸ்டங்களை தவிர்ப்பதற்காக ரயில் நிலையங்களுடன் இணைக்கும் வகையில் கொழும்புக்கும் பத்தரமுல்லவிற்கும் இடையில் சொகுசு உள்ளக போக்குவரத்து திட்டத்தை ஏற்படுத்துதல். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
| --- | --- | --- | --- |
| | | | • போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களை உரிய வகையில் பராமரிக்கவும் தேவையான பஸ்களை கொள்வனவு செய்யவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>• இலங்கை போக்குவரத்து சபையின் பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பான பிரச்சினைக்கு குறுகிய காலத்தில் தீர்வை பெற்றுக்கொடுத்தல்.<br>• போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ் சேவைகள் போட்டித் தன்மையின்றி நியாயமான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் சாதாரண மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாமல் பொது நேர அட்டவணையின் கீழ் போக்குவரத்து சேவையை வழங்குதல்.<br>• ஒவ்வொரு வீதிக்கும் 24 மணி நேரத்திற்கும் செயற்படக்கூடிய போக்குவரத்து சேவையை வழங்குதல்.<br>• சுற்று சூழலுக்கு பாதிப்பற்ற வகையிலான போக்குவரத்து திட்டத்தை முன்னெடுத்தல்<br>• எந்தவொரு பஸ்சிலும் பயன்படுத்தக் கூடிய ஈ- டிக்கட்டுக்களை (E-Ticketing System) அறிமுகப்படுத்தல்<br>• பயணிகளுக்கு உகந்த பொது போக்குவரத்து சேவைகளை வழங்க தேவையான அறிவு மற்றும் பயிற்சியினை வழங்குதல், இந்தத் துறையில் உள்ள தொழிலாளர்களின் தொழிலை மதித்தல் மற்றும் அவர்களின் அணுகுமுறை மற்றும் நடத்தை ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு முறை உருவாக்கப்படும்.<br>• தற்போது நடைமுறையில் உள்ள சில நியாயமற்ற அபராதங்கள் மற்றும் நியாயமற்ற வரி விதிமுறைகளில் திருத்தம் செய்யப்படும். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | புகையிரத சேவை அபிவிருத்தி | • புகையிரத சேவையை கட்டியெழுப்புவதற்காக தற்காலிக ரயில் மற்றும் ரயில் வீதிகளை மேம்படுத்தல் மற்றும் பராமரிப்புக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும்.<br>• அதைத் தொடர்ந்து, திறமையான மற்றும் வசதியான ரயில் சேவையை பராமரிக்கும் பொறுப்புடன் ரயில்வே துறைக்கு புதிய கட்டமைப்பு உருவாக்கப்படும்.<br>• பாணந்துறை , கொழும்பு, வெயாங்கொட, றாகம, கட்டுநாயக்க, நீர்கொழும்பு மற்றும் மருதானை, ஹோமாகம ஆகிய ரயில் சேவைகளுக்காக மின்சார ரயில் கட்டமைப்பை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.<br>• ரயில் சேவையை நவீனமயப்படுத்த புதிய தொழிநுட்ப முறை மற்றும் டிஜிடல் முறையை அறிமுகப்படுத்தி ரயில் பயணச் சீட்டு விநியோகத்தல் மற்றும் ஆசன ஒதுக்கீட்டுக்கு இணையத்தள சேவையை அறிமுகப்படுத்தல்<br>• ரயில் நிலையங்கள் பிரதான நகரங்களில் உள்ள ரயில் நிலையத்திற்கு சொந்தமான காணிகளை பாவனைக்கு உட்படுத்தி கடைத் தொகுதிகள், நிதிச் சேவை, ஹோட்டல், திரையரங்கு, பொழுதுபோக்கு மத்திய நிலையம் மற்றும் மாடி வீடுகளுடனான வணிக மத்திய நிலையங்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல் |
| | | நீர் போக்குவரத்து திட்டத்தை மேம்படுத்தல் | • வெள்ளவத்தை நகர பகுதியில் இருந்து பத்தரமுல்ல வரையில் நீர் போக்குவரத்து திட்டத்தை மேம்படுத்தல். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| துறைமுகம் மற்றும் விமான சேவை | | துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களின் இயலளவை மேம்படுத்தல் | • கொழும்பு "கட்டுநாயக்க மற்றும் ஹம்பாந்தோட்டை" மத்தள விமானம் மற்றும் கடற் போக்குவரத்து மற்றும் சரக்கு விநியோக மத்திய நிலையங்கள் இரண்டாக அபிவிருத்தி செய்தல்.<br>• உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உற்பத்தி தொழிற்றுறையை ஆரம்பிப்பதற்காக கொழும்பு "கட்டுநாயக்க மற்றும் ஹம்பாந்தோட்டை" மத்தள வலயங்கள் இரண்டை சுதந்திர முதலீட்டு வலயமாக ஆரம்பித்தல் |
| துறைமுக அபிவிருத்தி | ஏனைய பிராந்திய துறைமுகங்களுடன் போட்டியிடக்கூடிய வகையில் உயர் வினைத்திறனை ஏற்படுத்தி பொருளாதார அபிவிருத்திக்கு வசதியளிக்கக்கூடிய வகையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல் | கொழும்பு துறைமுக அபிவிருத்தி | • கொழும்பு துறைமுகத்தின் மீள் ஏற்றுமதி கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்தல்<br>• சர்வதேச பயணிகள் முனையத்தை புதிதாக நிர்மாணித்தல்<br>• தற்போது பயன்பாட்டில் இல்லாத கிழக்கு முனையம் விரைவில் ஆரம்பிக்கப்படும்.<br>• பிரதான வீதிகளில் பாரவூர்தி போக்குவரத்தால் ஏற்படும் வாகன நெரிசலை தடுப்பதற்காக வெயாங்கொட, ரத்மலானை மற்றும் பேலியகொட ஆகிய இடங்களில் ரயில் நிலையங்களுக்கு அருகில் மூன்று கொள்கலன் மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன |
| | | ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி | • ஹம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தை திருத்தம் செய்வதற்காக சீன அரசாங்கத்துடன் இராஜதந்திர கலந்துரையாடலை உடன் ஆரம்பித்தல்.<br>• ஹம்பாந்தோட்டை துறைமுகம் சேவை வழங்கும் மத்திய நிலையமாகவும் கப்பல்களுக்கு தேவையான எரிபொருள், உணவு, பராமரிப்பு உள்ளிட்ட சேவைகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>• ஹம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்திற்கு தேவையான சகல |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | பௌதீக வளங்களையும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| | | ஏனைய துறைதுகங்களின் அபிவிருத்தி | • காலி, காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறைமுகத்தின் வலய தேவைக்காகவும் தேசிய பொருளாதார தாழ்வாரத்திற்கு பொருத்தமான முறையில் மறுசீரமைப்பு செய்யப்படும். |
| விமான நிலையங்களின் அபிவிருத்தி | சர்வதேச மற்றும் உள்ளுர் பயணிகள் மற்றும் சரக்கு நகர்விற்கு வசதியளிக்கக் கூடிய வகையில் துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | விமான நிலையங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி | • கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது ஓடுபாதை இரண்டாவது பயணிகள் பாவனை கட்டிடத் தொகுதி என்பவற்றின் நிர்மாணப் பணிகளை தாமதமின்றி ஆரம்பித்தல்<br>• உள்ளுர்விமான போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக உள்ளுர் பயணிகள் பாவனை கட்டிடத்தொகுதி ஒன்றும் புதிதாக ஆரம்பிக்கப்படும்.<br>• உள்ளக விமான கம்பனிகளுடன் கலந்துரையாடி மத்தளை விமான நிலையத்தின் விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிப்பதுடன், மத்தளை விமான நிலையத்தின் துணை ஓடுபாதை (Taxi way) மற்றும் பொருள் கட்டிடத் தொகுதி என்பவற்றினை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• சகல உள்ளுர் விமான நிலையங்களும் சுற்றுலாக் கைத்தொழிலின் மேம்பாடு கருதி அபிவிருத்தி செய்யப்படுவதுடன்,<br>• நுவரெலியாவிலும் சிறிய விமான நிலையமொன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| மின்சாரம் மற்றும் எரிசக்தி | பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு அவசியமான குறைந்த கிரயத்திலான எரிசக்தி கிடைப்பனவினை உறுதிப்படுத்துதல் | தற்போதுள்ள எரிசக்தி கலவையை மேம்படுத்தல் | • இலங்கையை அண்மித்த கடல் வலயத்தில் கணிய எண்ணெய் ஆய்வை மேற்கொள்ள தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக முன்னெடுத்தல்<br>• தற்போது கண்டறியப்பட்டுள்ள இயற்கை எரிவாயு அகழ்வு வேலைத்திட்டத்தை மூன்று வருடங்களில் முன்னெடுத்தல்<br>• 40 வருட பழைமையான கொலன்னாவ எண்ணை களஞ்சிய சாலையை நவீனமயப்படுத்தல்<br>• திருகோணமலை எண்ணைத் தாங்கிகளை மீளமைத்து பயன்பாட்டுக்கு எடுத்தல்.<br>• அடுத்த ஆண்டு புரோட்பேட் நீர் மின் நிலையம் 2021 இலும் உமா ஓயா, 2023இல் மொறகொல்ல, 2024இல் தளப்பிடிகல மற்றும் சீதாவாக்க நீர் மின் உற்பத்தி நிலையங்களை ஆரம்பித்து இதனூடாக நான்கு வருடத்திற்குள் 230 மெகாவோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்.<br>• களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையத்தினை இயற்கை வாயுவினால் இயங்கும் நிலையமாக மாற்றியமைத்தல் மற்றும் 2023இற்கு முன்பாக கெரவலபிட்டிய மற்றும் ஹம்பாந்தோட்டையில் இதே போன்ற 2 நிலையங்கள் நிறுவுதல் |
| | | நாட்டின் எரிசக்தி கலவையை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களுக்கு மாறுதல் | • 2021க்கு முன்னர் மன்னாரில் 100 மெகாவோல்ட் காற்றலை மின் உற்பத்தியை ஆரம்பித்தல்<br>• மன்னார்,புனரீன் மற்றும் மொனராகளை உட்படநாடு முழுவதும் சூரிய மின்சார உற்பத்தியை ஆரம்பித்து எதிர்வரும் பத்து ஆண்டுகளில் 800 மெகாவோல்ட் மின்சாரத்தை நாட்டின் தேசிய மின் கட்டமைப்புடன் இணைத்தல்<br>• எதிர்வரும் ஐந்தாண்டுகளில் வீடு, அலுவலகம் மற்றும் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | தொழிற்சாலைகளின் கூரைகளில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்கலம் ஊடாக சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்ய அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு செலவாகும் முழு முதலீட்டையும் இலகு வட்டி வங்கி கடன் ஊடாக பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.<br>• சூரிய மற்றும் காற்றலை மின் உற்பத்திதிட்டத்தை ஆரம்பிப்பதல் தனியாருக்கு தற்போது காணப்படும் தடைகள் நீக்கப்படும்<br>• ஒவ்வொரு மாகாணங்களிலும் நகர கழிவு பயன்பாட்டு மின் உற்பத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.<br>• புதிய கொள்கைகள் மற்றும் சட்ட வரையறைகளை அறிமுகம் செய்து நிர்மாணத்துறையில் எரிசக்தி பயன்பாட்டினை குறைத்தல். |
| நீர் வளம் | அணைவருக்கும் நீர் கிடைப்பதை உறுதிப்படுத்தல் | நீர்மூலங்கள் மாசடைவதைத் தடுத்தல் மற்றும் அவற்றினை விவசாயம் மற்றும் குடிநீருக்காக வினைத்திறனாக பயன்படுத்துதல் | • இலங்கையில் உள்ள அனைத்து ஆறுகள் மற்றும் நீரோடைகளை பராமரிக்கவும் பாதுகாக்கும் திட்டத்தின் கீழ், பல்கலைக்கழகங்கள், பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பலதரப்பட்ட மக்களை உள்ளடக்கி விரிவான திட்டத்தை முன்னெடுக்க உள்ளோம்.<br>• ஆறுகளின் கரைகள் மற்றும் குளங்ளை சுத்தப்படுத்துவதன் மூலம் நீர்பாசன முறையை பாதுகாப்பதற்கான விரைவான திட்டத்தை ஆரம்பித்தல்.<br>• மழைநீரை சேமித்து வைப்பதற்கும், புதிய தொட்டிகள் மற்றும் நீர்த்தேக்க அமைப்பை உருவாக்குவதற்கும் தற்போதுள்ள தொட்டிகள் மற்றும் நீர்த்தேக்கங்களின் திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்<br>• ஆறுகள், நீரோடைகள்,குளங்கள் மற்றும் நீர் மூலங்களுக்கு, |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | விவசாய நிலங்களிலிருந்து செல்லும் இரசாயன கழிவுகள் அல்லது மனிதர்களின் செயற்பாடுகளை தடுக்க ஒரு புதிய அமைப்பை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.<br>• புற்றுநோய், சிறுநீரக நோய் அதிகம் பரவிச் செல்லும் பகுதிகளில் இந்த திட்டம் உடன் ஆரம்பிக்கப்படும்.<br>• புதிதாக நிர்மாணிக்கப்படும் ஒவ்வொரு வீட்டிற்கும் மழை நீர் மற்றும் நிலையான சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக கழிவுநீரில் இருந்து நிலத்தடி நீர் திறனை அதிகரிக்க மழைநீர் சேகரிப்பு முறை அறிமுகப்படுத்தப்படும்.<br>• விவசாயத்துறையில் வினைத்திறனான நீர் பாவனையை ஊக்குவிக்கும் முகமாக நீர்த்துளி நீர்பாசனம் உட்பட நவீன தொழிநுட்பங்களை அறிமுகம் செய்தல்<br>• இதற்காக மானிய வட்டியிலான கடன்கள் மற்றும் வரிச் சலுகைகளை அறிமுகம் செய்தல் |
| | | வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வறட்சி முகாமை | • களனி, களு, ஜின் மற்றும் நில்வள கங்கைளை அண்மித்த பகுதிகளில் நீண்ட காலமாக ஏற்படும் வெள்ளம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்<br>• வெள்ளம் மற்றும் வறட்சியினை கட்டுப்படுத்த வருடாந்தம் பில்லியன் கணக்கான நிதி செலவிடப்படுகிறது. இந்த நிதியைப் பயன்படுத்தி வெள்ள நீரைக் கட்டுப்படுத்தவும் நீர் தேவையான பகுதிக்கு கொண்டுச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த திட்டம் 2025 ஆம் ஆண்டுக்கு முன்னர் செயற்படுத்தப்படும். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | நாடு பூராகவும் 24 மணிநேரமும் நம்பகரமான நீர்க்கிடைப்பனவினை உறுதி செய்தல் | • அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக தற்போதுள்ள திட்டங்களை விரிவுப்படுத்தி 24 மணிநேரமும் நாடு பூராகவும் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சுத்தமான குடிநீரை வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் மூன்று ஆண்டுகளில் பூர்த்தி செய்தல்<br>• அனைத்து கைத்தொழில் மற்றும் வர்த்தக கட்டிடங்களின் நிர்மாணத்தின் போது நீர் மீள் சுழற்சி முறைமைகளை உருவாக்குவதை கட்டாயப்படுத்துவதற்கான புதிய சட்ட விதிகள் அறிமுகம் செய்யப்படும் |
| அனர்த்த முகாமைத்துவம் | உயிர்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல் | இடர் முகாமைத்துவ முறைமையானது ஒருங்கிணைந்த முறையில் செயற்படுவதற்கான உள்ளக முறைமையினை உருவாக்குதல்<br><br>அனர்த்த முன்னறிவிப்பு முறைமையினை உறுதி செய்தல்<br><br>அனர்த்தங்களின் போது நிறுவனங்கள் உடனடியாக பொறுப்புடன் செயற்படும் வகையில் | • அனர்த்த முகாமைத்துவத்தை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் 35ம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்ட மூலம் மற்றும் அதன் கீழ் உளள் அனைத்து உப பிரிவுகளும் மறுசீரமைப்பு செய்யப்படும்<br>• மிக துல்லியமான எதிர்வு கூறல்களை செய்யக்கூடிய தொழில்நுட்ப வசதி கொண்ட நவீன உபகரண உதவிகொண்டு, காலநிலை அவதான நிலையம் நவீனமயப்படுத்தப்படும்.<br>• தேசிய கட்டிட ஆராய்ச்சி நிலையத்திற்கு தேவையாக சட்டரீதியான பலத்தை மற்றும் தேவையான வசதிகளையும் பெற்றுக்கொடுத்தல்<br>• அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தை ஒன்றிணைத்து “அனர்த்த முகாமைத்துவ அதிகார சபை” ஸ்தாபிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் கொண்டுவரப்படும்.<br>• அனர்தத்தத்துக்குள்ளாகும் மற்றும் அவதானத்திற்குரிய பிரதேசம், மக்கள், கட்டிடங்கள், வியாபார நிலையங்கள் மற்றும் விவசாய நிலங்கள் உட்பட அனைத்து தகவல்களை சேகரிக்கும் “தேசிய அனர்த்த தகவல் களஞ்சியம” ஒன்று உருவாக்கப்படும்.<br>• உமா ஓயா மற்றும் ஏனைய செயல்திட்டங்கள் காரணமாக் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | அதிகாரங்கள் மற்றும் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும்<br><br>துரிதமான தீர்மானமெடுத்தல் மற்றும் திட்டமிடலுக்கு அவசியமான தகவல் கிடைப்பனவினை உறுதி செய்தல் | சொத்துக்கள் மற்றும் காணிகளுக்குக் ஏற்பட்டுள்ளன பாதிப்புக்கள் சரிவர மதிப்பீடு செய்வதற்கு நடவடிககை எடுக்கப்படும்.<br>• அனர்தத்தால் பாதிக்கபப்ட்ட விசேடமாக பெண்கள்,பிள்ளைகளுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. எனவே இத்தகைய சந்தர்ப்பங்களில் அடிப்படை வசதிகள் கொண்ட "பாதுகாப்பு - பராமரிப்பு மத்திய நிலைய" அமைப்பு வழிமுறை ஒன்று அறிமுகப்பபடுத்தப்படும்.<br>• சொத்துக்கள், இடங்கள் அல்லது பயிர் நிலங்களுக்கு இடம்பெற்ற அழிவுகளை மிகச் சரியாக கணக்கிட்டு, தாமதமின்றி அதற்கான இழப்பீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | | யானை மனித முரண்பாட்டினை முகாமை செய்தல் | ▪ நாட்டின் பல மாவட்டங்களில் உள்ள யானை-மனிதர் தாக்குதல் காரணமாக ஏற்படும் உயிர்ச்சேதங்கள், சொத்துச் சேதங்களை நிறுத்துவதற்கு நிரந்திர தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.இந்த<br>▪ குறுகிய கால தீர்வாக, தற்போது நிறுத்தப்பட்டு இருக்கும், யானை தடுப்பு வேலிகளை மீளவும் தாமதமன்றி ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>▪ யானைகள் கிராமங்களுக்குள் வருவதை தடுக்க,நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய வழிமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.<br>▪ வன விலங்கு பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ள வன ஜீவராசி நிலங்களில் நீர்வசதி மற்றும் அவற்றிற்கான உணவை வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும்<br>▪ யானைகளால் சேதத்திற்குள்ளான வீடுகள் சொத்துகக்ளை மீள கட்டியெழுப்ப அரசாங்கம்நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளும்.<br>▪ அத்துடன் உடல் ரீதீயாக பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உரிய இழப்பீடுகள் பெற்றுக்கொடுக்கப்படும் |

# அத்தியாயம் 08
# நிலைபேறான சுற்றாடல் கொள்கை

**சமநிலையான சமூக, பொருளாதார மற்றும் சூழல் நடவடிக்கைகள் மூலம் நிலைபேறான அபிவிருத்தியை அடைதல்**

- சுற்றாடல் பாதுகாப்புக்கான சட்ட விதிகள்
- தற்பொதுள்ள சுற்றாடல் கொள்கைகள் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை மேம்படுத்தல்
- அபிவிருத்தி கொள்கை வேலைச் சட்டகத்திற்கு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்வாங்குதல்
- நிலைபேறான அபிவிருத்திக்கு மரபு ரீதியான மற்றும் சுதேச அறிவு மற்றும் தொழில்நுட்பங்களை உள்வாங்கல்
- மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டினை உறுதிப்படுத்தும் முகமாக அனைத்து மட்டங்களுடனும் ஒருங்கிணைந்து செயற்படுதல்

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| நிலம் | இலங்கையில் நிலங்கள் பொதுமக்களின் வதிவிடமாகவும், அவர்களை பேணும் ஒரு இருப்பிடமாகவும் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் ஏனைய ஜீவராசிகள், விலங்குகள், உயிரினங்கள் வாழ்வதற்கான ஒரு | தேசிய இடம்சார் பௌதீக திட்டம் வலுப்படுத்தப்படும் | • விலங்குகள் மற்றும் தற்போது வாழ்கின்றவர்கள் மற்றும் எதிர்கால சந்ததியினருக்காக இந்த நிலத்தை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு தேசிய இடம்சார் பௌதீக திட்டம் (National Physical Plane) ஒன்று வகுக்கப்படும்.<br>• கமத்தொழில், கால்நடை வளர்ப்பு, விவசாயம் மூலம் சூழல் மாசடைவை குறைத்து, சூழலை விஞ்ஞான பூர்வமாக கையாண்டு, பொருளாதார அனுகூலங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.<br>• பாழடைந்த மற்றும் பயன்படுத்த முடியாமல் கைவிடப்பட்ட நிலங்களிலும் விவசாயத்தை விருத்தி செய்வதற்காக மற்றும் வனப் பூங்காக்களை உருவாக்குவதற்காக தனியான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | இருப்பிடமாக அமைகிறது. இந்த உரிமையை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ற வகையில் காத்திரமான நடவடிக்கை முன்னெடுக்கப்படும். | மண் சரிவினைத் தடுத்தல் | • மண் கரைந்து செல்லல் மற்றும் மண்சரிவு மேலும் மண் வறட்சி என்பவற்றை தடுக்கும் வழிமுறையாக மலை நாட்டில் மூடுபயிர் முறைமை மீண்டும் முறையான திட்டமிடலுடன் நடைமுறைப்படுத்தப்படும்.<br>• மண்சரிவுக்கு உட்படும் பிரதேசங்களில், அதனை தடுப்பதற்காக தேவையான அதியுயர் தொழில்நுட்ப வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | | முக்கியமான சுழல் முறைமைகளைப் பாதுகாத்தல் | • சதுப்பு நிலம் மற்றும் கண்டல் தாவரங்கள் பாதிப்புறும் வகையில் மேற்கொள்ளப்படும் மனித நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி, அப்பகுதிகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| கழிவு முகாமைத்துவம் | சுழற்சிப் பொருளாதாரம் (Circular Economy) | 3R மீள்பாவனை மீள் சுழற்சி குறைத்தல் அணுகுமுறையினை உள்வாங்குதல் | • சுற்றாடல் சார் கைத்தொழில் வலயங்களை (Eco industrial zones) ஆரம்பித்து, பசுமை பொருளாதாரம் (Green economy) ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.<br>• கழிவுகளை உருவாக்காமல் இருப்பது மற்றும் கழிவுகள் உருவாக்கப்படும் அளவுகளை குறைப்பதற்கு அவசியமான அனைத்து வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும்<br>• சிறுபராயம் முதல் பேண்தகு நுகர்வு எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• கைத்தொழில் மற்றும் வீட்டுக் கழிவுகளை வகைப்படுத்தி அகற்றும் நடவடிக்கையை கட்டாயப்படுத்துவதுடன், அது பற்றிய மக்களின் அறிவை விருத்தி செய்வதற்காக உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்து, பரவலான பிரசார வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் |
| | | கரையோர மற்றும் கடல்சார் சூழல் பாதுகாப்பு | • பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் கைவிடப்படுவதால், தற்போது இலங்கையை சுற்றியுள்ள கடல்பகுதிக்கும், ஆழ்கடலுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களின் மூலம் சமுத்திர வளங்களுக்கு ஏற்படும் அழிவை தடுப்பதற்காக சமுத்திரத்திரத்தை சுத்தப்படுத்தும் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். |
| | | திண்மக் கழிவு சேகரிப்பு மற்றும் அழித்தல் நடைமுறைகள் | • பல உள்ளூராட்சி மன்றங்களை ஒன்றிணைத்து, கழிவு சேகரிப்பு நிலையங்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாக்கும் வகையிலான கழிவுகளை ஒன்றுசேர்க்கும் இடங்களை ஸ்தாபிப்பதற்கும், முறையற்ற கழிவகற்றல் நடவடிக்கையை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்<br>• வைத்தியசாலைகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள், தொழில்நுட்ப மற்றும் இலத்திரனியல் கழிவுகளை அகற்றுவதற்கான உரிய வழிமுறைகளை அமைத்து, பொறுப்பற்ற கழிவகற்றல் முறைமைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| வளிமண்டலம் | காபன் அற்ற (Net Zero) நாடு | காபன் குறைப்பு உட்பட வளிமண்டலம் மாசடைதலைக் கட்டுப்படுத்ததல் | • இயற்கை வாயு மீள்சுழற்சி முறையை மீண்டும் பலப்படுத்துவதற்காக வரிசை மரநடுகை, நகர மரநடுகை முறை, வீதியோர மரநடுகை, முறைகளின் மூலம் பூங்கா மற்றும் வீட்டுப் பயிர்ச் செய்கை முறைகளுக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். |
| | | காபன் மயமாதலை தடுத்தல் | • போக்குவரத்து கைத்தொழில் மற்றும் கட்டடங்களை நிர்மாணிக்கும் போது, காபன் மயப்படாத வழிமுறை ஊக்கப்படுத்தப்படும். |
| உயிர் பல்வகைமைத் தன்மை | உயிர் பல்வகைமைத் தன்மையை பாதுகாத்தல் | உயிர் பல்வகைமைத் தன்மையை பாதுகாக்கதில் உள்ள நிறுவக ரீதியான தடைகளை நீக்குதல் | • உயிரியல் பன்முகத் தன்மையை பாதுகாத்தல், மீளமைத்தல் மற்றும் மீள் உருவாக்கல் போன்ற விடயங்களை ஒரே நிறுவனத்தின் கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• நவீனமயப்படுத்தல் பொறிமுறை ஒன்றின் மூலம் நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு உயிர் பல்வகைமைத் தன்மையின் பங்களிப்பை பெற்றுக் கொள்வதாகும். உணவு, மருந்து, சுற்றுலா, கல்வி மற்றும் கலாசார விடயங்களுக்காக உயிரியல் பன்முகத்தன்மையை உரிய திட்டமிடப்பட்ட, முறையான நிர்வாகத்தின் கீழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அவற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• இயற்கைச் சுற்றுச் சூழலை மீளமைப்பதோடு, அழிவடைந்த சுற்றாடல் மீளமைக்கப்படும். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | நிலைபேரான நிலம் மற்றும் நீர்வள முகாமைத்துவம் | தேசிய வன வளத்தினை 30% வரை உயர்த்துதல் | • நகர மற்றும் பகுதியளவு நகர் வனப் பூங்காக்களை உருவாக்கல்<br>• அதிவேக பாதை ஓரங்களில் வரிசை மரநடுகை முறையை அபிவிருத்தி செய்தல்,<br>• அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலும், தொழிற்சாலைகளை அண்டிய பகுதிகளிலும் மரங்களை நடுவதன் மூலம் நாடு பூராகவும் மரநடுகையை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| | | மணல் அகழ்வதற்காக உரிய வழிகாட்டல்கள் பெற்றுக்கொடுக்கப்படும் | • ஆற்று மணல் மற்றும் நிலத்தில் மணல் அகழ்வுக்கான வீசேட வலயங்கள் அறிமுகம் செய்யப்படும் |
| சமுத்திர வளம் | நீலப் பசுமை பொருளாதாரம் | நிலை பேறான சமுத்திர வள முகாமை | ▪ சமுத்திர பல்கலைக்கழகத்தை சர்வதேச தரத்திற்கு தரம் உயர்த்துவதுடன்,<br>▪ சமுத்திர ஆய்வுக்கு முன்னுரிமையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும.<br>▪ வேகமாக இடம்பெற்றுவரும் கடலரிப்பை தடுப்பதற்காக உடனடி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.<br>▪ நிர்மாணத்துறைக்கு சுத்திகரிக்கப்பட்ட கடல் மணல் பாவணையை ஊக்குவித்தல்<br>• சுத்திகரிக்கப்பட்ட மற்றும் அறிக்கப்பட்ட கடல் மணலுக்கு தரச்சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல் |
| மக்கள் வசிப்பிடம் மற்றும் நகரங்கள | மக்கள் வசிப்பிடங்களை நிர்மாணிக்கும் போது, முதன்மையாக சூழலுக்கு குறைந்தளவு பாதிப்புக்களை ஏற்படுத்தும் வகையிலான இடங்களை தெரிவு | நிலை பேறான நிலப் பாவனை | • உபாய சுற்றாடல் மதிப்பீட்டின் அடிப்படையில் (SEA - Strategic Environment Assessment) முடியுமானவரை வலயங்களாக (Zoning) அடையாளம் கண்டு, பிரிக்கப்படும்.<br>• நிலத்துடன் இணைக்கப்பட்ட பொருளாதார (Land Based Economy – அனைவருக்கும் நிலம்) எண்ணக்கருவின் அடிப்படையில் மக்கள் குடியிருப்புக்கள் அயல்வீட்டு மூலதர்மம் (Neighborhood Principal) மற்றும் வளர்ச்சியுறும் பசுமை அபிவிருத்தி (Vertical Green Development) என்ற எண்ணக்கருவின் கீழும் நிர்மாணிக்கப்படும் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | செய்வதோடு, பாதிப்புக்கு உள்ளாகலாம் என தற்போது இனங்காணப்பட்டுள்ள முக்கிய பகுதிகளில் எந்த வகையிலுமான பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட மாட்டாது. | | • இவ்வாறு கட்டியெழுப்பப்படுகின்ற வசிப்பிடங்கள் பசுமை மற்றும் ஸ்மார்ட் நகரமாக (Green and Smart City) அமைய வேண்டியதுடன், அனைத்து உட் கட்டுமான வசதிகள் மற்றும் சேவைகள் ஒன்றிணைக்கப்படுவது அவசியமாகும். |
| | | இயற்கை அழிவுகளுக்கு தாக்குப்பிடிக்கின்ற கிராமங்கள் | • கிராமியப் பிரதேசங்களில் நிர்மாணிக்கப்படும் கிராமங்கள் இயற்கை அழிவுகளுக்கு தாக்குப்பிடிக்கின்ற கிராமங்களாக (Disaster Resilient Village) உருவாக்கப்படவும் நடவடிக்கை மேற்கொள்ளல் |
| சுற்றாடல் கல்வி | சூழல் நட்பான சமூகமொன்றை உருவாக்குதல் | சுற்றாடல் சார் கல்வியினை மேம்படுத்தல் | ▪ முறைசார் மற்றும் முறைசாரா சுற்றாடல் கல்வியை ஆரம்பம் முதல் பாடத்திட்டத்தில் உள்வாங்கப்படல் வேண்டும்.<br>▪ சூழல் மீளமைப்பின் மூலம் நடைபெறும் தொழில்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முயற்சியாண்மைகளில் (Eco Entrepreneurship) பயணிப்பதற்காக பிள்ளைகள் மற்றும் இளைஞர்களின் மனதை கவரும் வகையிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.<br>▪ வனப்பாதுகாப்பு மற்றும் நீர் பாதுகாப்பு, மண்வளப் பாதுகாப்பு, கடற்கரைப் பாதுகாப்பு, கழிவு முகாமைத்துவம், சக்திவலு முகாமைத்துவம், ஒலி முகாமைத்துவம் போன்ற சுற்றாடல் பொறுப்புக்களை பற்றி மக்களின் அறிவை விருத்தி செய்தல்<br>▪ சுற்றாடல் கண்காணிப்பு தொடர்பாக தற்போது நிலவுகின்ற கடினத் தன்மையை நீக்கி, அதற்காக இலகு மற்றும் தெளிவான பொறிமுறைகள் அறிமுகம் செய்யப்படும். |

# அத்தியாயம் - 09

## சட்டத்தை மதிக்கும் குணநலம் கொண்ட ஒழுக்கநெறியான சமூகம்

- மதத்திற்கு முன்னுரிமையளித்தல்
- சட்ட ஆட்சியினூடாக நாகரிகமான சமூகத்தை கட்டியெழுப்புதல்.
- எதிர்கால சந்ததியினருக்காக வரலாறு தொல்பொருள் மற்றும் தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தல்
- கருத்துக்களை பரிமாறுவதற்கு தடைகளற்ற சந்தர்ப்பங்களை உருவாக்குதல்
- சமூக சமத்துவத்தில் காணப்படும் சமமின்மையைக் குறைத்து வலுவிழந்தவர்களை பாதுகாப்பது அரசின் கடமையாகும்

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| சமயம் | மதத்திற்கு முன்னுரிமை | அனைத்து மதங்களினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் | • அரசியல் யாப்பின் 9ஆவது சரத்தில் குறிப்பிடப்படும் வகையில், பௌத்த மதத்திற்கு உரிய முன்னுரிமையும் மற்றும் பௌத்த சாசனமும் எம்மால் பாதுகாக்கப்படும்.<br>• அனைத்து பிரஜைகளுக்கும் தமது மதத்தை பயமின்றி பின்பற்றும் உரிமையை உறுதிப்படுத்துவோம்.<br>• கிராமப் பிரதேசங்களில் உள்ள விஹாரைகள் மற்றும் முறையாக பராமரித்துச் செல்வதற்கான பலமான நிர்வாக சபை இல்லாத அனைத்து விஹாரைகளும் மற்றும் தசசில் மாதா நிலையங்களிலும் உள்ள சுகாதார வசதிகள், நீர், மின்சாரம், வீதிகள் போன்ற கீழ் கட்டுமான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக சசுன்உதாவ என்ற பெயரில் தேசிய வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும்.<br>• அதன் கீழ், பௌத்த சாசன நிதியம் மற்றும் மத்திய கலாசார நிதியம் மூலம் விஹாரைகளும், தசசில் மாதா நிலையங்களினதும் பாராமரிப்பு மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்காக முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.<br>• கிராமிய விஹாரையில் தங்கியிருக்கும் பிக்குகள் மற்றும் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | நிர்வாக சபையை மையப்படுத்திய சமூகப் பொருளாதார மற்றும் ஆன்மீக வளர்ச்சி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.<br>• இளைய பௌத்த பிக்குமாரின் ஆங்கில மொழி அறிவு, கணினி அறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்வதற்காக புதிய கல்வி நடவடிக்கைகளை உருவாக்கப்படும்.<br>• பிக்குமார்களின் கல்வி செலவினங்களுக்காக மாதாந்த அனுசரணை பங்களிப்பு முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.<br>• சாசனத்திற்கு தமது குழந்தைகளை பொறுப்பளித்த பெற்றோர் அனைவருக்கும் அரச மரியாதையை செலுத்தும் முகமாக "புதுபுத் மாபிய ஹரஸர" (புத்தமகன் பெற்றோர் பெருமை) என்ற பெயரில் பெற்றோரை பாராட்டும் மற்றும் சலுகைகளை வழங்கும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.<br>• பிரிவெனா கல்வியை மேம்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் கீழ் விசேட வேலைத்திட்டத்தை உருவாக்கி, அதன் மூலம் பிரிவெனாக்களின் தலைமை பிக்கு மற்றும் பிரிவெனா, அறநெறிப் பாடசாலைகளில் தீர்க்கப்படாத நியமனங்கள், சம்பளம், மேலும் கொடுப்பனவுகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• அனைத்து மதங்களினதும் பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக மாகாண சபையுடன் ஒன்றிணைந்த வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படும். |
| சட்டம், சமூக நீதி | சட்டம் ஒழுங்கை பாதுகாத்தல் | சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்க எந்நேரமும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதோடு, எவருக்கும் சட்டத்தின் | • சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் நபர்களும் சட்டத்திற்குக் கீழ்படியும் சூழல் ஒன்று உடனடியாக உருவாக்கப்படும்<br>• காலம் கடந்த சட்டங்களும் மற்றும் சட்ட வரைபுகளும் சீர்திருத்தப்பட்டு எதிர்காலத்திற்கு பொருத்தமான சட்ட அமைப்பொன்று உருவாக்கப்படுவதோடு, |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | ஆட்சிக்கு சவால் விடுக்க இடமளிக்கப்பட மாட்டாது | • நாட்டின் சட்டம் சர்வதேச சட்டத்துடன் சரியாக பொருந்துவதற்கு அவசியமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும்.<br>• நீதித்துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை உடனடியாக செயற்படுத்துவதன் மூலம், நீதிமன்ற அமைப்பில் காணப்படும் தாமதத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்<br>• சிவில் முரண்பாடுகளை நீதிமன்றம் வரை எடுத்துச் செல்லாமல், திருத்திக் கொள்வதற்காக பிணக்கு சபை முறையை பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br>• சட்டத்தை செயற்படுத்தும் முறைமைகள் மற்றும் வழிமுறைகளை துரிதப்படுத்துவதற்காக குறித்த நபர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கப்படும்<br>• சட்டத்தை செயற்படுத்துவதற்கு உதவிபுரியும் நிறுவனங்கள் உரிய முறையில் மறுசீராக்கப்படும்<br>• நீதிமன்ற அமைப்பு மற்றும் அதனுடன் தொடர்பான நிறுவனங்கள் டிஜிட்டல் தொழில்நுட்ப நீதிமன்ற அமைப்பொன்றின் மூலம் ஒன்றோடொன்று இணைந்த வகையில செயற்பட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• நீதிபதிகளின் பதவி மற்றும் சட்டத்துறையில் உயர் பதவிகளுக்காக நியமனங்களை மேற்கொள்ளும் போது தகுதி, சிரேட்டத் தன்மை மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் செயற்படும் வெளிப்படையான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.<br>• ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிக்கும் போது, வெளிப்படையான தன்மை கொண்ட நேரடி வழிமுறையொன்று அறிமுகம் செய்யப்படும். |
| ஊடகம் | வெளிப்படையான வெகுசன ஊடகக்கொள்கை ஒன்றை அறிமுகம் செய்தல் | தடையின்றி தகவல் அறிதல் மற்றும் கருத்து தெரிவித்தல் தொடர்பாடலுக்கான தடையின்றிய | • ஊடக தரப்படுத்தல் தொடர்பாக உள்ள தேசிய மற்றும் சர்வதேச சட்ட வரைபுகள் பேணப்படும்<br>• வெகுசன ஊடகத்துறைக்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்படும் போது ஊடகவியலாளர் மற்றும் ஊடக நிறுவன கலாசாரம், சமூகம், குடும்ப மற்றும் மனித |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | வாய்ப்புக்களை உருவாக்குதல். | தொடர்புகள் பற்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூகக் கலாசார பெறுமதிகளுடன் ஒழுக்கநெறிகள் தொடர்பான வரையறைகளை மீறாமல் இருப்பது தொடர்பான புரிந்துணர்வுடன் செயற்படுத்தப்படும்.<br>• உயர் தொழில் திறன் உள்ள ஊடக தொழிலாளர்களை உருவாக்குவதற்காக சர்வதேச தரத்திற்கு அமைய, அரச அனுசரணையுடன் "ஊடக உயர் கல்வி நிறுவனம்" உருவாக்கப்படும்.<br>• ஊடக மற்றும் தொடர்பாடல் துறையில் நிலவும் பிரச்சினைகளை இனங்கண்டு, துறைசார் தரங்களுக்கு அமைய இக்கல்வித் துறையை அபிவிருத்தி செய்வதற்காக துறைசார் நிபுணர் குழுவொன்றின் பரிந்துரைகளுக்கு அமைய, முழுமையாக மீளமைக்கப்படும்.<br>• தொழில்சார் ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச தரத்திற்கு அமைவான பயிற்சிளுக்கான வாய்ப்புக்கள் விருத்தி செய்யப்படும்.<br>• பத்திரிகை சபையை அமைப்பு ரீதியான மீள் கட்டமைப்புக்கு உள்ளாக்கி, இலத்திரனியல், அச்சு மற்றும் நவீன ஊடகங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய வகையில், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்கள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் நிறுவனமாகவும் ஊடகக் கல்வியை விருத்தி செய்கின்ற மத்திய நிலையமாகவும் மீளமைக்கப்படும்.<br>• ஊடகவியலாளர்களுக்காக நகர குடியிருப்பு தொகுதிகள் நிர்மாணிக்கப்படும்<br>• சலுகை வாகனக் கடன் முறைமை அறிமுகப்படுத்தப்படும்.<br>• பிரதேச ஊடகவியலாளர்கள் உட்பட அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் வசதிகளை வழங்குவதற்காக அனைத்து வசதிகளுடன் கூடிய "ஊடக கழகம்" (Press Clubs) முறைமையொன்று மாகாண ரீதியாக உருவாக்கப்படும்.<br>• சமூக வலைத்தளம் உட்பட நவீன ஊடக பயன்பாடு மற்றும் கையாளுதல் தொடர்பான அறிவு, தெளிவு, தொடர்பாடல் முறைமைகளை சமூகமயப்படுத்துவதற்கு |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| | | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பன வணிக போட்டித் தன்மையின் அழுத்தம் இல்லாமல் ஊடகத்துறையின் முன்னுதாரணமாக செயற்படும் நிறுவனங்களாக மாற்றுவதற்கு பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூறக்கூடிய ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்படும். | |
| வரலாறு, தொல்பொருள் மற்றும் தேசிய மரபுரிமைகள | எதிர்கால சந்ததியினருக்காக வரலாறு, தொல்பொருள் மற்றும் தேசிய மரபுரிமைகளை பாதுகாத்தல் | புனித ஸ்தலங்கள் பாரம்பரிய உரிமைகள் அல்லது தொல்பொருள் களை சேதப்படுத்துவதற்கு எவருக்கும் இடமளிக்கப்படாததோடு, அவ்வாறான அனைத்து ஸ்தலங்களும் தேசிய உரிமையாக கருதப்பட்டு, இயன்றளவு பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் | • சட்டதிட்டங்களில் அவசியமான சீர்திருத்தம் செய்து தொல்பொருள்களைப்,பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதோடு, அதற்கு அதி உயர் பாதுகாப்பு வழங்கப்படும்<br>• அனைத்து இனக் குழுக்களும் மற்றும் வளங்களுக்கும் உரிய, தொல்பொருள் மற்றும் பாரம்பரிய பெருமைகளை கொண்ட ஸ்தலங்கள் மற்றும் தேசிய உரிமைகள் தொடர்பான தகவல் அடங்கிய “டிஜிட்டல் தொல்பொருள் அகராதி” ஒன்றை உருவாக்கப்படும்<br>• இவ் இடங்களை பார்வையிடுவதற்காக வருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவசியமான அடிப்படை வசதிகளை அவ்விடங்களில் உள்ள தொல்பொருள் பெறுமதிக்கு சேதம் ஏற்படுத்தாத வண்ணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• தேசிய மரபுரிமைகள் மற்றும் தொல்பொருள் நிலையங்கள் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | தொடர்பாக சரியான தகவல்களை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குவதற்காக சுற்றுலா வழிகாட்டிகளுக்கு அறிவூட்டல் மற்றும் தகவல்களை பெற்றுக் கொடுக்கும் வழிமுறை ஒன்று மேற்கொள்ளப்படும். |
| கலாசாரம், இலக்கியம் மற்றும் கலை | கலை,கலாசாரம்,மற்றுமஇலக்கியம் என்பவற்றின் உயர் தரத்தினை பாதுகாத்தல் | கலை,கலாசாரம், மற்றும்இலக்கியம் என்பவற்றினை பாதுகாப்பதற்கு அவசியமான நிதியினை பெற்றுக்கொடுத்தல் | • நாவல்கள், சிறுகதைகள் மற்றும் காவிய நூல்களை உயர் தரத்திற்கு கொண்டு செல்வதற்காக நூல் வெளியீடு மற்றும் விற்பனை போன்றவற்றை அதிகரிப்பதற்காக புதிய வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும்.<br>• புத்தகங்களை அச்சிடுவதற்கு தேவைப்படுகின்ற தாள் மற்றும் அச்சு இயந்திரங்கள் ஆகியவற்றிற்கு வரி விலக்கு வழங்கப்படும்<br>• படைப்பாளர்களுக்கான பிரசுர உரிமைக் கொடுப்பனவுகளை முறையாக வழங்குவதற்கான பொருத்தமான வழிமுறைகள் மேற்கொள்ளப்படும்.<br>• இலங்கை தேசிய நூலக சேவை சபையின் கீழ் காணப்படுகின்ற புத்தக வெளியீட்டுத் திட்டத்தின் அளவை விரிவுபடுத்துவதற்காக தற்போது வழங்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்படும்.<br>• சிறுவர் மற்றும் இளைஞர் இலக்கிய நூல் படைப்புக்களுக்கு அவசியமான வசதிகளை வழங்குவதோடு,ஈ-புத்தக (E-Books) பாவனைக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும்.<br>• சிங்கள மொழியில் வெளியிடப்பட்டுள்ள சிறந்த படைப்புக்கள் மற்றும் இலக்கிய நூல்கள், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்படவும், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில்வெளியிடப்பட்டுள்ள அதுபோன்ற நூல்களை சிங்கள மொழிக்கு மொழிபெயர்ப்பு செய்வதற்கும் விசேட உதவி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதோடு, நாட்டில் உள்ள அனைத்து நூலக அமைப்புக்களும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய வகையில் மீளமைக்கப்படும். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| மேடை நாடகத் துறை | | மேடை நாடக அரங்குகளுக்கு நவீன தொழில்நுட்ப வசதிகளைப்பெற்றுக் கொடுத்தல் | • தலைநகரில் மேடை நாடகங்களை தயாரித்தல், இயக்குதல் மற்றும் உருவாக்கம் தொடர்பான அறிவு மற்றும் பயிற்சிகளை பெறக்கூடிய "நாடக அரங்கம்" அமைக்கப்படும்.<br>• முறையான வழிமுறையின் கீழ் படைப்பாளர்களுக்கு அங்கு மேடை நாடகப் பயிற்சிக்கு இலவசமாக இடமளிக்கப்படும்.<br>• அனைத்து மாவட்டங்களிலும் நடிப்புத்துறை கல்வி நிறுவனங்கள், நூலக வசதிகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய கலையரங்கம் ஸ்தாபிக்கப்படும்.<br>• கலாசார திணைக்களத்தின் கீழ் உள்ள எதிரிவீர சரத்சந்திர நாடகக் கல்லூரி முழுமையாக மீளமைக்கப்படுவதோடு, அதன் கீழ், வரலாற்றில் சிறந்த உள்நாட்டு மேடை நாடகங்கள் மீள் உருவாக்கத்திற்கு அவசியமான நிதியுதவி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.<br>• மேடை நாடகம் நாடு பூராகவும் அரங்கேற்றுவதற்கு நாடக ஏற்பாட்டாளர்களை ஊக்கமளிப்பதற்காக அவர்களுக்கு அவசியமான வரி சலுகைகள் வழங்கப்படும். |
| சினிமாத்துறை | | உள்நாட்டு சினிமா கைத்தொழில் தற்காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆய்வுசெய்வதற்காக விசேட செயலணி உருவாக்கப்படும் | • புத்தாக்கத்துடன் கூடிய கலை உணர்வில் உயர் சினிமா தயாரிப்புகளுக்கு அவசியமான அரச அனுசரணை பெற்றுக் கொடுப்பதோடு,<br>• உயர் மற்றும் சர்வதேச மட்டத்திலான சினிமா உற்பத்திகளுக்கு உற்பத்தி செலவின் 50%ஐ வட்டியில்லாத கடனாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• இளைஞர்களின் முதலாவது திரைப்பட உருவாக்கத்திற்கு 80% வட்டியில்லாத கடன் வழங்கப்படும்<br>• திரைப்பட உருவாக்கத்திற்கு அவசியமான நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் அடங்கிய முழுமையான ஆய்வுகூட வசதிகளைக் கொண்ட நிலையமொன்று ஆரம்பிக்கப்படும்<br>• சினிமா கைத்தொழிலில் நிதி முதலீடுகளை மேற்கொள்வதற்கு தனியார் தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான வரி சலுகை வழங்கப்படும்.<br>• நாடு பூராகவும் உள்ள அனைத்து திரையரங்குகள் டிஜிட்டல் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய திரையரங்குகளாக தரம் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | உயர்த்தப்படுவதோடு, நகர்ப் பிரதேச தொடர்மாடி குடியிருப்புக்கள் மற்றும் பல்துறை வணிக நிலையங்களில் சிறிய கலையரங்குகளை நிர்மாணிப்பதற்கு அரச அனுசரணை வழங்கப்படும்.<br>• இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தை மீள அபிவிருத்தி செய்து, திரைப்பட உருவாக்கத்திற்கும், அறிவித்தல், விளம்பர வேலைத்திட்டங்கள் மற்றும் அறிக்கை நிகழ்ச்சிகள் உருவாக்கத்திற்கும் தொடர்ச்சியாக பங்களிக்கக்கூடிய பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்படும். |
| இசைத்துறை | | பாடல் மற்றும் இசைப் படைப்புத் துறையின் படைப்பாளர் உரிமை தொடர்பாக நிலவும் பிரச்சினைகளைத்தீர்த்தல் | • படைப்பாளர் உரிமைக் கொடுப்பனவு தொடர்பாக சர்வதேச இணக்கப்பாடுகளுக்கு அமையப்பெற்ற முறையான ஏற்றுக் கொள்ளப்படத்தக்க பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்படுத்தல்<br>• பாடல் மற்றும் இசை வெளியீடுகளில் குறித்த படைப்பாளர்களின் எழுத்துரிமையை குறிப்பிடவும், குறித்த எழுத்துரிமை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை புதுப்பிப்பதும் கட்டாயப்படுத்தப்படும்.<br>• தொலைபேசி நிறுவனங்களின் வணிக வருமானங்களுக்காக பாடல் படைப்புக்களை பயன்படுத்தும் போது, தற்போது வழங்குகின்ற எழுத்துரிமை 50 வீதம் வரை உயர்த்தப்படும்.<br>• அனைத்து படைப்பாளர்களினதும் புலமைச் சொத்து வணிக நோக்கங்களுடன் பயன்படுத்தும் போது எழுத்துரிமை மற்றும் வெளியீட்டு உரிமை தொடர்பான கொடுப்பனவுகளை சட்டத்திற்கு அமைவாகவும், சட்டத்திற்கு உட்படுத்துவதோடு, அச்சட்டங்கள் டிஜிட்டல் ஊடகம் தொடர்பாகவும் பின்பற்றப்படும்.<br>• பாடல் மற்றும் இசைப் படைப்புத்துறைக்கு பிரவேசிக்கும் புதிய படைப்பாளிகள் சுயமாக தமது படைப்பாற்றல் திறனை விருத்தி செய்து கொள்ளவும், உயர் இசை இரசனைக்கு உட்படுத்தவும், இசை, நாடகம், ஒபெரா உட்பட இலக்கிய படைப்புகளுக்கு அவசியமான அரச அனுசரணை |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | வழங்கப்படும். <br>• புத்தாக்க மற்றும் கலை உணர்வுமிக்க உயர் படைப்புக்களை உருவாக்குவதற்காக கல்வி மற்றும் பயிற்களை பெற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனமொன்று உருவாக்கப்படும். |
| | | இசை அரங்குகளில் உயர் தரத்திலான இசைக்கலைகள் உருவாக்கப்படுவதை ஊக்குவிக்கப்படும் | • உயர் தொழில்நுட்ப தரத்துடன் கூடிய படைப்புக்களை உருவாக்குவதற்காக முழுமையான செவி மற்றும் பார்வை அரங்குகள் மற்றும் ஒலியரங்குகளை நிர்மாணிப்பதற்கு தனியார் துறையினருக்கு அவசியமான வரி சலுகைகள் வழங்கப்படும். <br>• இசைக் கச்சேரிகளை ஏற்பாடு செய்யும் போது தற்போது அறவிடப்படும் வரி சீர்த்திருத்தப்படும் |
| நடனத்துறை | | பாரம்பரிய நடன சம்பிரதாயங்களை பாதுகாப்பது தொடர்பாக வழிமுறைகள் மேற்கொள்ளப்படும் <br><br>மேல் நாட்டு மற்றும் கீழ்நாட்டு, சப்ரகமுவ நடனங்கள் உட்பட்ட பாரம்பரிய சம்பிரதாய நடனத்துறையை தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கு அவசியமான அனுசரணை வழங்கப்படும் | • பாரம்பரிய மற்றும் நவீன நடன கலைஞர்கள் தமது நடனங்களை உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்தில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படுத்திக் கொடுக்கப்படும் <br>• அவசியமான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்காக அவர்களுக்கு , சுற்றுலாக் கைத்தொழிலுடன் ஒன்றிணைந்து, அரங்கேற்றல் வாய்ப்புக்கள் விரிவுபடுத்தப்படும். <br>• பாரம்பரிய நடன கலைக்குரிய அடையாளத்துடன் நுண்கலையை பாதுகாப்பதுடன், நடனக் கலையை பிரபல்யப்படுத்துவதற்காக இலத்திரனியல் ஊடகம் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு விரிவுபடுத்தப்படும். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| ஓவியம் மற்றும் சிற்பக்கலைத்துறை | | ஓவியம் மற்றும் சிற்பக்கலைத் துறையின் படைப்புக்களை காட்சிப்படுத்துவதற்கும் விற்பனை செய்வதற்கும் வசதியளித்தல். | • தலைநகரில் முழுமையான வசதிகளுடன் கூடிய ஓவியம் மற்றும் சிற்பக் கலை காட்சியகமொன்று அமைக்கப்படும்<br>• இவ்வாறான கலையரங்க அமைப்பொன்றும் மாவட்ட மட்டத்தில் நிர்மாணிக்கப்படும்.<br>• ஓவிய மற்றும் சிற்பக் கலைஞர்களுக்கு தமது படைப்பை காட்சிப்படுத்தல் மற்றும் விற்பனைக்கான சுற்றுலாத் துறையுடன் ஒன்றிணைந்த வகையிலான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.<br>• ஓவிய மற்றும் சிற்பக்கலைத் துறையின் சிறந்த படைப்புக்களை பாதுகாப்பதற்கான பாதுகாப்பகம் ஒன்று நிர்மாணிக்கப்படும். |
| பரிகார பூசகர்கள் | | கலாசார அமைச்சின் கீழ், பாரம்பரிய பிலி தொவில் கலைஞர்கள் உட்பட பரிகார பூசகர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மற்றும் அவற்றை கண்காணிக்கும் ஒழுங்குபடுத்தல் முறைமை ஒன்று உருவாக்கப்படும் | • பரிகார பூஜை செயற்பாடுகளுக்கு அவசியமான சில மூலப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை கையில் வைத்திருப்பதற்கான சட்ட ரீதியான அனுமதி வழங்கும் பொறிமுறையொன்று உருவாக்கப்படும். |
| சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி வசதிகள | | குறைந்த வருமானம் பெறுவோரை உயர் வருமானம் உடையவர்களாக மாற்றும் வேலைத்திட்டம் | • அரசியல் காரணங்களின் அடிப்படையில் நிறுத்தப்பட்ட, அதிக பிரதிபலன்களை பெற்றுக் கொண்ட திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தை உடனடியாக செயற்படுத்துதல்<br>• குறைந்த வருமானம் உடையவர்களை பலப்படுத்துவதற்காக ஒரு லட்சம் குறைந்த வருமானம் உடைய குடும்பங்களை தெரிவு செய்து, விவசாயம், மீன்பிடி, கால்நடை போன்ற பெறுமதி மிக்க உற்பத்திகளை மேற்கொள்ளக்கூடிய கொத்தனிக் கிராமம் (பொக்குரு கம்மான) கூட்டுறவு |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | முறையொன்றை ஏற்படுத்தி, அதற்கு அவசியமான பயிற்சி, உட்கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்.<br>• சமுர்த்தி குடும்பங்களின் இளைஞர் - யுவதிகளுக்கு தொழில் பயிற்சி வேலைத்திட்டங்களை வழங்கி, திறன் அபிவிருத்தி உடைய தொழில் படையணி ஒன்றாக உருவாக்குவதோடு,<br>• அவர்களுக்கு அரச மற்றும் தனியார் துறையிலும் மேலும் வெளிநாடுகளில் தொழில்களை பெற்றுக் கொள்ளவும் முடியுமான வேலைத்திட்டங்கள் உருவாக்கப்படும்.<br>• தற்போது சமுர்த்தி அதிகாரசபை மூலம் குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கு வழங்கும் அனைத்து மானியங்களையும் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• அனைத்து சமுர்த்தி வங்கிகளும் நவீன தொழில்நுட்ப முறைக்கு மீளமைக்கப்படுவதுடன் நாளாந்த செயற்பாடுகளை தொலைபேசியின் ஊடாக செயற்படுத்தவும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.<br>• சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் சேவையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தொடர்பாகநிலவும் சம்பளக் கொடுப்பனவு, பதவியுயர்வு மற்றும் ஓய்வூதியம் பற்றிய பிரச்சினைகள் உடனடியாக தீர்க்கப்படும்.<br>• தற்போதுள்ள ஓய்வூதிய திட்டங்களுள் உள் வாங்கப்படாத அனைத்து சமூக அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய வகையில், புதிய பங்களிப்பு ஓய்வூதிய முறை மற்றும் முதியோரின் சுகாதாரம், மத மற்றும் ஏனைய காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தேசிய பங்களிப்பு செயற்படும் சமூக பாதுகாப்பு நிதியம் ஒன்று அமைக்கப்படும்.<br>• புற்றுநோய், சிறுநீரக பாதிப்பு போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்காக வழங்கப்படுகின்ற மாதாந்த கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படும்.<br>• 12 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளை உடைய, பெற்றோரில் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | ஒருவர் மாத்திரம் வாழ்கின்ற எவ்வித வாழ்வாதாரமும் அற்ற ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும். |
| குற்றத் தடுப்பு | | | • பொலிஸ் துறையானது அனைத்து வகையான குற்றங்களையும் தடுப்பதற்கு அவசியமான நவீன தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சிகளை வழங்கி பலப்படுத்தப்படும்.<br>• அனைத்து குற்றவியல் வழக்குகளையும் தாமதமின்றி நிறைவு செய்வதற்கு நீதித்துறை கட்டமைப்பு மீள் அமைக்கப்படும்.<br>• குற்றவாளிகளுக்கு உதவி வழங்கும் அனைத்து அரசியல் தலையீடுகளையும் தடுப்பதற்கு அவசியமான கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்று உருவாக்கப்படும்.<br>• சிறைச்சாலையினுள் குற்றவாளிகளை கண்காணிப்பதற்கான நவீன தொழில்நுட்ப வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும்.<br>• சிறு குற்றங்களுக்கும் முதல் முறையாக சிறை பிடிக்கப்படுபவர்களை மீண்டும் சமூகமயப்படுத்தும் செயற்பாட்டுக்கான நவீன புனர்வாழ்வு முறைமைகளை கொண்டமைந்த முழுமையான வசதிகளுடன் கூடிய புனர்வாழ்வு மத்திய நிலையங்கள் இரண்டு ஆரம்பிக்கப்படும்.<br>• மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கப்படும் நபர்களுக்கும் புனர்வாழ்வு அளிப்பதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும். |
| | | வீதி விபத்துக்களை தடுத்தல் | • பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அனைத்து வீதிகளிலும், நடைபாதைகள் நிர்மாணிக்கப்படுவதோடு,<br>• வீதியை கடப்பது உரிய இடங்களில் மட்டும் செயற்படுத்துவதற்கான வழிமுறை ஒன்று ஏற்படுத்தப்படும்.<br>• அனைத்து பிரதான மற்றும் கிளை வீதிகளில் CCTV கமரா மூலம் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் ஆபத்தான மற்றும் பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களை செலுத்துபவர்கள் அடையாளம் காணப்படுவர். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
| --- | --- | --- | --- |
| | | | • வாகன விபத்துக்களின் மூலம் இடம்பெறுகின்ற மரணங்கள் மற்றும் நிரந்தர அங்கவீனர்களாக மாறுபவர்களுக்கு பொருத்தமான நட்டஈட்டினை உடனடியாக பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் சட்டங்கள் திருத்தப்படும். |
| விலங்கினங்களுக்கும் கருணை | | | • தேசிய சொத்தான காட்டு யானைகள் உட்பட அனைத்து வண விலங்குகள் மற்றும் பறவைகள் போன்ற எமது இயற்கை வளங்களை பாதுகாப்பதற்காக கடுமையான பாதுகாப்பு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்படும்.<br>• கடந்த ஐந்து வருடங்களில் அநியாயமான முறையில் கொல்லப்பட்ட யானைகள் பற்றி உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.<br>• பாதைகளில் விட்டுச் செல்லப்படுகின்ற வீட்டு வளர்ப்பு விலங்குகளை பராமரிப்பதற்கான நிலைங்களை நடாத்துபவர்களுக்கு அரச அனுசரணை வழங்கப்படும்.<br>• வளர்ப்புப் பிராணிகளுக்கு அவசியமான மருந்துகள் மற்றும் ஏனைய பொருட்களுக்கான குறைந்த விலை முறையொன்று அறிமுகப்படுத்தப்படும்.<br>• விலங்குகள் மீது கருணை காட்டும் பண்பை சிறு வயது முதல் பழக்கப்படுத்துவதற்காக “விலங்குகளுக்கு கருணை காட்டும் சிறுவர் சமூகம்” என்ற எண்ணக்கரு நடைமுறைப்படுத்தப்படும். |

# அத்தியாயம் -10
# கிராமத்துடனான கலந்துரையாடல்

- 2025இன் போது எமது நடவடிக்கைகளின் பிரதிபலனாக தனிமைப்பட்டுள்ள கிராமங்கள் முழுமையான பொருளாதார மையங்களாக மாற்றம் பெறும்
- அனைத்து மக்களும் பயம் மற்றும் சந்தேகமின்றி வாழக்கூடிய வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வது எமது இலக்காகும்
- பிரதானமாக தேயிலைத் தோட்ட துறையில் வேலை செய்யும் பெருந்தோட்ட மக்களும் நாட்டின் பிரஜைகளாக கருதி அனைத்து உரிமைகளும் பெற்றுக் கொடுக்கப்படும்

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| கிராமிய அபிவிருத்தி | அனைத்து கிராமங்களுக்கும் அவசியமான அனைத்து அடிப்படை வசதிகளும் பெற்றுக்கொடுக்கப்படும் | மக்கள் மைய சபைகள் மற்றும் மக்கள் மைய நிலையங்களை உருவாக்குதல் | • கிராமத்தின் விஹாரையின் தேரர்கள், ஏனைய சமயத் தலைவர்கள், சிரேஷ்ட பிரஜைகள்,இளைஞர்கள் மற்றும் மகளிர் பிரதிநிதிகள் உள்ளடக்கிய கிராமத்தின் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றினை நிவர்த்தி செய்யும் அரசாங்க வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தும் மற்றும் குறைபாடுகளை சுட்டிக்காட்டும் உரிமையுடைய “மக்கள் மைய சபையொன்று” ஒவ்வொரு கிராம சேவை பிரிவிலும் தாபிக்கப்படும். அதனூடாக நிதி பயன்பாடானது வெளிப்படையான தன்மையுடான் மேற்கொள்ளப்படும்.<br>• ஒவ்வொரு கிராம சேவை பிரிவிலும்மற்றும் மக்கள் மைய நிலையம் தாபிக்கப்படும அதில் ஒன்றுகூடல் மண்டபம், கிராம அலுவலர், சமுர்தி அலுவலர், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர், குடும்ப சுகாதார அலுவலர், உள்ளிட்ட கிராமத்திற்கு பணியாற்றும் அலுவலர்களின் அலுவலகமாக செயற்படும். மேலும் அதில் இணைய வசதி கொண்ட தொலைத்தொடர்பு நிலையமொன்றும், இலத்திரனியல் வாசிகசாலை ஒன்றும் (E - Library) சிறுவர் நிலையமொன்றும், இலத்திரனியல் ஆசிரியர் மாணவர் அறையொன்றும் மற்றும் தொழில்நுட்ப சேவை நிலையமொன்றும் நிறுவப்படும்.<br>• மின்சாரம், சுத்தமான குடிநீர், நுழைவுப் பாதைகள், நீர்பாசன |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | வசதிகள், முன்பள்ளி, தாய் சேய் நிலையம், சமூக நிலையம், விளையாட்டு மைதானம், கழிவுப் பொருள் முகாமைத்துவம் என்பவற்றின் பராமரிப்பு,விவசாயம், கடற்றொழில் சிறிய கைத்தொழில் என்பவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப, ஆராய்ச்சி மற்றும் துணை சேவைகள் வழங்கல் பற்றிய கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் பணிகள் என்பன மக்கள் மைய சபைகளிடம் ஒப்படைக்கப்படும் |
| பெண்களை வழுப்படுத்தல் | கிராமிய பெண்களை பொருளாதார நடவடிக்கைகளுள் உள்வாங்கி அவர்களை விவசாய தொழில் முயற்சியாளர்களாக வழுப்படுத்தல் | பொருளாதார நடவடிக்கைகளுள்கிராமிய பெண்களின் பெறுமதியான பங்களிப்பினை அங்கீகரித்தல் | • தத்தம் பிரதேசத்திற்கு உரித்தான நெசவு கைத்தொழில் துறை, ஆடை கைத்தொழில் துறை, மர வேலைபாடுகள், ஆடை அலங்காரம், பிரம்பு, மற்பாண்டம், தும்பு கையிறு, கருவாடு போன்ற உற்பத்திகளின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறையில்ஈடுபடுவதற்கு விருப்பமுள்ள பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு அரச அனுசரனை பெற்றுக்கொடுக்கப்படும்<br>• பலா விதை, மாங்காய் போன்ற வீட்டு தோட்ட மேலதிக பயிர்கள் தேங்காய் சிரட்டை போன்ற பொருட்களுக்கு மேலதிக பெறுமதியை சேர்த்து உற்பத்தியாகவோ அல்லது உற்பத்தி நிலையங்களுக்கு மூலப்பொருளாக வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். இதற்காக வீடுகளுக்கே சென்று இப்பொருட்களை சேகரிக்கும் முறையொன்றும் தகவல்களை பரிமாற்றுவதற்கான தொலைதொடர்பு மென்பொருளும் (Mobile app) அறிமுகப்படுத்தப்படும்.<br>• சில வங்கிகள் தமக்கு சட்டரீதியான அனுமதி இல்லாத நிலையில் சில நிதி நிறுவனங்கள் கடந்த காலங்களில் எவ்வித ஒழுங்குப்படுத்தலும் இன்றி நாடு முழுவதும் அதிகவட்டிக்கு பல்வேறு நுண்கடன்களை வழங்கியுள்ளனர் இதன் ஊடாக பல லட்சக்காணக்கான கிராமிய பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறான பெண்களுக்கு துரித நிவாரணம் வழங்க நியாயமற்ற முறையில் வழங்கப்பட்ட நுண்கடன்கள் இரத்து செய்யப்படும். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| பிராந்திய அபிவிருத்தி | பிராந்திய அபிவிருத்தியுடன் கிராமிய அபிவிருத்தியை தொடர்புபடுத்தல் | நகரங்களை பெருநகரங்களாகவும் கிராமங்களை பிராந்தியங்களாகவும் அபிவிருத்தி செய்தல் | • உலகமயம், சனத்தொகை நிர்வாகம் ஆகியவிடயங்களைக் கருத்தில் கொண்டு பிரதேச செயலகங்களுக்கான புதிதாக எல்லை நிர்ணயிக்கப்படுவதற்கு முழு அதிகாரம் கொண்ட குழுவொன்று அமைக்கப்படும்.<br>• பிரதேச சபை நகரசபை அல்லது மாநகர சபை எல்லையில் முன்னெடுக்கப்பட வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட பிரதேச அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்கும் முன்னெடுப்பதற்கும் தேவையான கூடுதல் அதிகாரங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.<br>• கிராமம் மற்றும் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படும் நிதியானது தாமதமின்றி குறித்த அமைச்சின் ஊடாக நேரடியாக உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.<br>• உள்ளூராட்சி நிறுவனங்கள் ஜனமூல சபையின் ஒருங்கிணைப்புடன் உரிய கால எல்லையில் உயர் பயனை பெறக்கூடிய வகையில் தமது எல்லையில் சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் அபிவிருத்தி பணிகள் பூர்த்தி செய்யப்படும்.<br>• இந்த திட்டத்தின் முடிவுகளாக 2025ஆம் ஆண்டளவில் தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களுக்கு பதிலாக முன்னேற்றகரமான சகல வசதிகளையும் கொண்ட பிரதேசங்கள் உருவாக்கப்படும். |
| வடக்கு கிழக்கு பிராந்திய அபிவிருத்தி | அனைத்து இலங்கையருக்கும் பயங்கரவாதத்திலிருந்து விடுதலை | வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதார மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் | • வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தையும் அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும் வலுவூட்டுவதற்கும் புத்தாக்க நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படும். அதன் கீழ் -<br>• வடக்கு கிழக்கு யுத்ததினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை பெற்றுக்கொடுப்பதற்கும்<br>• நுண்கடன் முறையினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் உட்பட வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள குடும்ப பெண்களுக்கும் நிவாரணம் அளிக்கக்கூடிய வகையில் அரசாங்கத்தினால் பல்வேறு தொழிற்துறைகளுக்கு சலுகை கடன் மற்றும் விவசாய கைத்தொழில் கடன் வழங்கப்படும். |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | • புனர்வாழ்வு அளிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண இளைஞர் யுவதிகளுக்கு தமது வாழ்க்கையை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தேவையான வர்த்தக முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு தேவையான முதலீடுகளை பெற்றுக்கொடுப்பதற்கும்<br>• மனிதாபிமான நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் நட்டஈட்டை அதிகரிப்பதற்கும்<br>• எங்களால் ஆரம்பிக்கப்படும் பொருளாதார அபிவிருத்தி வலயங்கள் அல்லது வேறு இடங்களில் இப்பிராந்திய இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் பெரிய அல்லது நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான மூலதனம் பெற்றுக்கொடுப்பதற்கும்<br>• இளைஞர்களுக்கு தொழில் பயிற்சிகள் மற்றும் தெரில்வல்லமைக் கற்கைகளை கற்பதற்கான கடன் வசதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு<br>• இப்பிரதேசங்களில் அரசினால் கைப்பற்றப்பட்டுள்ள தனியார் காணிகளை உரியவர்களுக்கு மீள்கையளிப்பதற்கும் மற்றும் பெரிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாய முயற்சியாளர்களுக்கு அரச காணிகளை குத்தகைக்கு விடுவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்<br>• வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் அரச தொழில் வாய்ப்பு வெற்றிடங்களை நிரப்பும் போது இயன்றளவு அம்மாகாண இளைஞர் யுவதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அம்மாகாணங்களில் பணிபுரிவதற்கு இலங்கை பொலிஸ் சேவைக்கு ஆட்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.<br>• இவ்விரு மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ளுர் விவசாய உற்பத்தியாளர்களுக்கு பெறுமதி சேர்ப்பதற்கும் சிறிய மற்றும் நடுத்தரளவான வர்த்தக முயற்சிகளை ஆரம்பிப்பதற்கும் பொருளாதார வலயங்கள் ஆரம்பிக்கப்படும்.<br>• வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் இளைஞர் யுவதிகளின் |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களின் எதிர்கால அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு பல்கலைக்கழக கல்லூரிகள் தொழில்சார் கல்வி நிறுவனங்கள் உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் தகவல் தொழில்நுட்பம் விவசாய ஆராய்ச்சி போன்றவற்றை ஆரம்பித்து அவர்களுக்கு தேவையான அறிவு மற்றும் பயிற்சியையும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் விரிவுப்படுத்தப்படும்<br>• நடனம், நாடகம், மற்றும் இசை கச்சேரிகள் நடத்துவது அத்துறையில் பயிற்சி மற்றும் கற்பித்தல் நடவடிக்கைக்காக வசதிகளை வழங்கும் நவீன வசதிகளுடன் கூடிய "தாமரை தடாகம்" ஒன்று யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளதோடு, சர்வதேச மட்டத்திலான விளையாட்டு மைதானம் ஒன்றும் உயர் தரத்திலான கிரிக்கட் மைதானம் ஒன்றும் இவ்விரு மாகாணங்களுக்கும் வழங்கப்படும். |
| பெருந்தோட்டப்புறம் சார்ந்த சமூகம் | பெருந்தோட்ட மக்களை வலுவூட்டல் | குடியிறுப்பு,கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதனுாடாக பெருந்தோட்ட மக்களை வலுவூட்டல் | • தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1000 ரூபாயாக அதிகரிக்கப்படும்.<br>• சம்பளத்திற்கு மேலதிகமாக சகல குடும்பங்களுக்கும் மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்வதற்காக தோட்டங்களில் தற்போது பயன்படுத்தப்படாத காணிகளை உள்நாடு மற்றும் வெளிநாட்டில் சந்தைக் கேள்விகாணப்படும் மல்லிகை பூ மற்றும் வேறு மலர் வகைகள், சேதன பசளையை கொண்டு செய்கை பண்ணப்படும் மரக்கறிகள் மற்றும் பழ வகைகளை பயிர்ச் செய்யும் வேலைத்திட்டம் மற்றும் காலநிலைக்கு பொருத்தமான இடை பயிர்களையும் பயிரிடுவதற்கான வேலைத்திட்டங்கள் உருவாக்கப்படும்.<br>• பெருந்தோட்ட மக்கள் வாழும் பகுதிகளில் தற்போது குறைபாடாக காணப்படும் உயர் தர விஞ்ஞானம் மற்றும் வணிக பாடங்களை கற்பிப்பதற்கான வசதிகள் உயர் தர கல்வி போதிக்கப்படும் சகல பாடசாலைகளுக்கும் வழங்கப்படும். சகல பாடசாலைகளுக்கும் தேவையான மனித மற்றும் பௌதிக வழங்களை |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | பெற்றுக்கொடுப்பதுடன் கடந்த காலங்களில் முறையற்ற வகையில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஆசிரியர் உதவியாளர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும்.<br>• பெருந்தோட்ட மக்களின் வீடில்லா பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு பெருந்தோட்டங்களின் உற்பத்திகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தற்போது வாழும் தோட்டப் புறங்களை அண்டிய பகுதிகளில் குறைந்த மாடிகளைக் கொண்ட அடுக்கு மாடி வீடமைப்பு திட்டம் ஒன்றையும் அரச மற்றும் தோட்ட உரிமையாளர்களின் பங்களிப்புடன் அறிமுகப்படுத்தப்படும். இந்த வீடமைப்பு திட்டத்தில் சகல வசதிகளும் கொண்ட சுகாதார நிலையங்கள் முன்பள்ளி பாடசாலைகள் சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளுடன் அனைத்து தோட்ட தொழிலாளர்களுக்கும் சகல வசதிகளும் கொண்ட வீடுகள் பெற்றுக்கொடுக்கப்படும்.<br>• கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர்களின் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்கு கிராமங்கள் மற்றும் தோட்ட மட்டத்தில் புதிய போசாக்கு திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் அதேநேரம் சகல தோட்ட மருத்துவமனைகளுக்கு தேவையான அனைத்து பௌதிக மற்றும் மனித வளத்தை வழங்கி சுகாதார வசதிகள் மேம்படுத்தப்படும்.<br>• விவசாய ஆராய்ச்சி அறிவு மற்றும் நவீன தொழில்நுட்ப பயன்பாட்டை இளைஞர் யுவதிகளுக்கு வழங்குவதற்காக விவசாய கல்லூரி ஒன்று உருவாக்கப்படும்<br>• சகல வசதிகளை கொண்ட தமிழ் மொழி மூல ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஒன்று அப்பகுதியில் உருவாக்கப்படும். பெருந்தோட்ட துறை இளைஞர் யுவதிகளுக்கு தேவையான தொழிற் கல்வியை வழங்குவதற்காக திறந்த பல்கலைக்கழக கிளை ஒன்றை ஹட்டனில் ஏற்கனவே அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br>• இந்த பிரதேசங்களில் தற்போது மூடப்பட்டுள்ள தொழிற்சாலைளை |

| துறை | துறை ரீதியான கொள்கைகள் மற்றும் கொள்கை வகுதிகள் | உபாயங்கள் | நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | | | மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்களை கண்டறிந்து தோட்ட துறையை உள்ளடக்கும் வகையில் புதிய கைத்தொழில் வலயம் ஆரம்பிக்கப்படும்.<br>• அரசாங்கத்திற்கு சொந்தமான தோட்டங்களில் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக மீள் பயிர்ச் செய்கை மற்றும் உர பயன்பாட்டுக்கு தேவையான மூலதனத்தை விநியோகிப்பதுடன் பொருத்தமான முகாமைத்துவ முறையொன்று அறிமுகப்படுத்தப்படும். இந்த தோட்டங்களில் உள்ள பழைய தோட்ட பங்களாக்கள் மற்றும் கைவிடப்பட்டுள்ள தேயிலை தொழிற்சாலைகளை சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய வகையிலான பங்களாக்களாக மாற்றுவதற்கு தேவையான செயற்பாடுகள் உருவாக்கப்படும். |